



# மின்சார நிலா

ராஜேஷ் குமார்



**இ**ந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் :

அசாத்திய பரபரப்போடு எல்லோரும் இயங்கிக் கொண்டிருக்க - கான்பரன்ஸ் ஹாலில் ஆர்வம் நிறைந்த விழிகளோடு நிருபர்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

சூழ்ந்திருந்த நிருபர்களுக்கு மத்தியில் நடுநாயகமாய் உட்கார்ந்திருந்தார்கள் அஜய் சர்மா, வைத்யா மற்றும் மாலிக்.

மூன்று பேருமே நடுத்தர வயது விஞ்ஞானிகள். தலையில் கணிசமாய் வழுக்கை வாங்கியிருந்தார்கள். தலையில் வெள்ளிக் கம்பிகளாய் நரை முடிகள்.

திருப்பர்கள் கும்பலிலிருந்து கேள்வி மழை பொழிய ஆரம்பித்தது.

"உங்களின் மின்சார நிலா திட்டம் பற்றி பலரும் பலவிதமாகக் கூறி வருகிறார்கள்... திட்டத்தில் நேரடியாய் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகளான நீங்களே அந்தத் திட்டத்தைப் பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்கம் கொடுத்து விடுங்கள்..."

பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் பெண் நிருபர் எழுந்து நின்று கேட்டதும் - சீனியர் விஞ்ஞானி அஜய்சர்மா தொண்டையைச் செருமிக் கொண்டு தன் முகத்தருகே இருந்த மைக்கில் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தார்.

"சுருக்கமாகச் சொல்வதென்றால்... ஒரு அணு மின் நிலையத்தை நிறுவப் போகிறோம்... இதில் உள்ள ஸ்பெஷாலிட்டி என்னவென்றால் மேற்படி அணுமின் நிலையத்தை நிலாவில் நிறுவ உள்ளோம்."

"சாத்தியமா...?"

அஜய்சர்மாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வைத்யா மெல்லிய புன்னகையை உதட்டோரம் தவழ விட்டுக் கொண்டே சொன்னார்.

"இன்றைக்கு மாலை விண்கலம் நிலாவை நோக்கிக் கிளம்பப் போகிறது... நாளை மறுநாள் நிலாவில் அணுமின் நிலையத்தை நிறுவும் பணி ஆரம்பமாகி விடும்..."

"எத்தனை பேர் செல்லப் போகிறீர்கள்...?"

"விஞ்ஞானிகள் நாங்கள் மூன்று பேர்... தவிர உதவியாளர்கள் வசிஷ்ட், சிநேகா..."

"ஐந்தே பேர்தானா...?"

"ஆமாம்..."

"தவறாக நினைக்க வேண்டாம்... ஐந்தே பேர் மட்டுமே நிலாவுக்குப் பயணப்பட்டுப் போய்... அங்கே ஓர் அணு மின் நிலையத்தை நிறுவுவது என்பது நடக்கக் கூடிய காரியமா...?"

புன்னகை கலந்த பதில் இப்போது மாலிக்கிடமிருந்து வந்தது.

"அணு மின் நிலையம் என்றவுடன் நீங்கள் ஏதோ பெரிய பெரிய கட்டிடங்களை கற்பனை செய்து கொள்ள



வேண்டாம்... எவ்வளவு பிரம்மாண்டமான சாதனத்தையும் உள்ளங்கை அளவுக்குச் சுருக்கி விடக் கூடிய ஹைடெக் கால கட்டம் இது... அங்கே சென்று நாங்கள் கட்டுமானப் பணிகள் எதையும் பார்க்கப் போவதில்லை... நிர்மாணப் பணிகள்தான்..."

"அப்படியானால்... கட்டுமானப் பணிகள் ஏற்கெனவே முடிந்து விட்டதா...?"

"யு ஆர் அப்ஸல்யூட்லி கரெக்ட்..."

"இங்கே ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டிலேயே வைத்து இயந்திரக் கட்டுமானம்... சோதனை ஓட்டம்... எல்லாமே நிகழ்த்திப் பார்த்தாயிற்று... அந்த ஹைடெக் அணுமின் நிலையத்தை விண்கலத்துடன் அட்டாச் செய்துள்ளோம்... நிலாவுக்கு அதை எடுத்துச் சென்று இன்ஸ்டலேஷன் அண்ட் இம்ப்ளிமென்டேஷன் செய்வதுதான் பாக்கி உள்ளது..."

"இன்ஸ்டலேஷன் அண்ட் இம்ப்ளிமென்டேஷன் பணிக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்...?"

"இரண்டு வாரங்கள் நாங்கள் நிலாவில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டியிருக்கும்..."

"அதற்குப்பிறகு...?"

"மின் நிலையம் உற்பத்தியைத் துவக்கி விடும்... விண்கலம் மட்டும் எங்களைச் சுமந்து கொண்டு பூமிக்குத் திரும்பி விடும்..."

"உற்பத்திப் பணியாளர்கள் யாரும் அங்கே இருக்க வேண்டியது இல்லையா...?"

"முற்றிலும் தானியங்கி இயந்திரங்கள்... அவற்றை இயக்குவதற்கு ஆட்களே தேவைப்பட மாட்டார்கள்... களப் பணிக்காக சில ரோபாட்களும் மின் நிலையத்தில் வடிவமைக்கப்பட்டு உள்ளன..."

"அங்கே உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பூமிக்கு எடுத்து வருவது எப்படி...?"

"உற்பத்தியாகும் மின்சாரத்தை லேஸர் பீம்களாக மாற்றி பூமிக்குக் கொண்டு வரும் சாத்தியம் உள்ளது..."

"நீங்கள் எடுத்துச் செல்லும் மின் நிலையம் எவ்வளவு வாட் திறன் கொண்டது...?"

''ஒரு ஜிகா வாட் (1,00,00,00,000) மின் உற்பத்தித் திறன் கொண்ட நிலையம் அது...''

ஒரு இளம் நிருபர் எழுந்து கேட்டார்.

''ஒரு முக்கியமான கேள்வி...''

''கேளுங்கள்...''

''இத்திட்டத்திற்கு கோடிக்கணக்கில் செலவு ஏற்படும்... இல்லையா...?''

''கண்டிப்பாக...''

''இதே மின் நிலையத்தை பூமியில் நிறுவுவதாக இருந்தால் அவ்வளவு செலவு ஏற்படப் போவதில்லை... நான் சொல்வது சரிதானே... ஸார்...?''

''மிகச் சரி...''

''அப்படியானால் ஏராளமாய் பணம் செலவழித்து இந்த மின் நிலையத்தை நிலாவில் கொண்டு போய் நிறுவுவதன் நோக்கம்... அவசியம்... என்ன...?''

''எந்த ஒரு ப்ராஜக்ட்டையுமே... அதன் ஆரம்ப முதலீட்டை மட்டும் வைத்துத் தீர்மானிக்கக் கூடாது... அத்திட்டத்தில் உள்ள நன்மைகள்... நடைமுறையில் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கக் கூடிய லாபங்கள்... எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்...''

''நிலாவில் இந்தத் திட்டத்தை நிறுவுவதால் அட்வான்ட்டேஜுகள் உள்ளனவா...?''

''நிச்சயமாக... அணுமின் நிலையத்தை நிலாவில் நிர்மாணிப்பதற்கான காரணங்களை நான் வரிசையாகச் சொல்லுகிறேன்... குறித்துக் கொள்ளுங்கள்...''

நிருபர்கள் தங்கள் கார்டுகளைத் நீட்டிக் கொண்டு காத்திருக்க -

வைத்யா தொடர்ந்தார்.

''அனைத்து நாடுகளிலும்... மின்சக்தித் தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது... பல நாடுகளில் பற்றாக்குறை நிலவுகிறது... அடுத்த நூற்றாண்டின் மத்தியில் புவியின் மின்சக்தித் தேவை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது...''

''இங்கே புதிய நிலையங்களைத் திறப்பது ஒரு பெரிய காரியம் இல்லை... ரா மெட்டீரியல்தான் பிரச்சனை...



எதிர்காலத்தில் ரா மெட்டீரியல் தட்டுப்பாடு கணிசமாய் நிலவும் என்பது எங்கள் கணிப்பு... சந்திரனில் கதிரியக்க மூலகங்கள் ஏராளமாய் உள்ளன... அவற்றைக் கொண்டே அந்த மின் உற்பத்தி நிலையங்களை இயக்கிக் கொள்ளலாம்...''

''சந்திரனில் உள்ள கதிரியக்க மூலகங்களை ஏகபோகமாய் நாம் எடுத்துக் கொள்வதில் சட்டச் சிக்கல்கள் ஏதும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா...?''

''வாய்ப்பே இல்லை...''

''எப்படிச் சொல்கிறீர்கள்...?''

''இந்த உலகத்தில் ஒவ்வொரு பகுதியுமே யார் முதலில் ஆக்ரமித்தார்களோ அவர்களுக்கே சொந்தமாகி உள்ளது... ஆகவே நாம் முந்திக் கொள்வதுதான் இதில் முக்கியம். மற்ற நாடுகள் இது பற்றி சிந்திக்கக் கூட துவங்குவதற்கு முன்னால் நாம் செயல் வடிவத்தை எட்டி விட்டோம்.''

''மின்சார நிலா திட்டத்தின் மூலம் வேறு என்ன நன்மைகள்...?''

''சுற்றுச் சூழல் பாதுகாப்பு இதில் முக்கிய அம்சம்... அணு மின் நிலையத்தை நிலாவில் அமைப்பதன் மூலம் கதிரியக்க அபாயத்திலிருந்து பூமியைக் காப்பாற்றுகிறோம்... அது மாத்திரமில்லை... மின் சக்தித் தேவையில்லை... மின் சக்தித் தேவையில் நாம் தன்னிறைவு அடைவதோடு அல்லாமல் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக நாடுகள் முழுவதற்குமே மின்சாரம் அளிப்பவர்களாக நாம் மாறியிருப்போம்... அதன் மூலம் பொருளாதார ரீதியாகவும் பலம் வாய்ந்த நாடாக ஆகி விடுவோம்...''

''கேட்பதற்கே சிலிர்ப்பாக இருக்கிறது... உங்கள் முயற்சிகள் வெற்றி பெற பத்திரிகையுலகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்...''

''தாங்க்யூ...''

பிரஸ் மீட் முடிந்து நிருபர்கள் கலைய ஆரம்பித்திருக்க - அஜய்சர்மா, வைத்யா, மாலிக் மூன்று பேரும் தங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து கான்பரன்ஸ் ஹாலினின்றும் வெளியே வந்தார்கள்.

காரிடாரில் நடந்து செல்லும் போது - உதவியாளர்கள் வசிஷ்டும், சிநேகாவும் வேகமான நடையில் எதிர்ப்பட்டார்கள்.

பதட்ட மூச்சு வாங்கியபடி - எதிரே வந்து நின்றான் வசிஷ்ட்.

''ஸார்...''

''என்ன வசிஷ்ட்...? ஏதாவது பிரச்சனையா...? ஏன் பதட்டமாய் இருக்கிறாய்...?''

''பிரச்சனைதான் ஸார்...''

''இயந்திரக் கோளாறு ஏதாவது ஏற்பட்டு உள்ளதா..?''

''அப்படி எதுவும் இல்லை...''

''பின்னே...?''

விஞ்ஞானிகள் மூவரும் கேள்விக் குறிப் பார்வைகளோடு அவனைப் பார்க்க - அவன் சிநேகாவிடம் திரும்பினான்.

கறுப்பு வெள்ளை மிடி அணிந்திருந்த இளமை ததும்பும் சிநேகா கலவரமாய் விழிகளைச் சிமிட்டிய படி தன் கையிலிருந்த கடிதத்தை அஜய் சர்மாவிடம் நீட்டினாள்.

''இந்த லெட்டர் சற்று முன்னர் நமக்கு வந்தது ஸார்...''

மூன்று பேரும் அந்தக் கடிதத்தின் மேல் பார்வையைப் போட்டார்கள்.

கம்ப்யூட்டரில் அச்சடித்த எழுத்துக்கள் காகிதத்தில் ஒட்டியிருந்தன.

**மதிப்பதற்கு அருகதை இல்லாத விஞ்ஞானிகளுக்கு,**

**இளைஞர் படையின் போர் வணக்கங்கள்.**

**கோடி கோடியாய்ப் பணத்தை இறைத்து விண்கலம் செய்வதும்... ராக்கெட் விடுவதும்... அவற்றைக் கடலில் கரைப்பதும்... உங்களுக்கெல்லாம் பொழுது போக்கு. நீங்கள் வாரி இறைக்கும் இந்தப் பணம்... மக்களின் வரிப்பணம். உழைக்கும் வர்க்கத்தினரிடம் இருந்து உறிஞ்சப்பட்ட ரத்தம் அது... நாட்டில் பசி பஞ்சம் பட்டினி என்று ஏராளமான அடிப்படைப் பிரச்சினைகள்**



**உள்ளன. அவற்றை முதலில் தீர்த்து விட்டு உங்கள் ஹைடெக் ஆராய்ச்சிகளுக்குப் பணத்தைச் செலவழியுங்கள். உங்கள் மின்சார நிலா திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டு அதற்காக ஒதுக்கியுள்ள பணத்தை ஏழை மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க பயன்படுத்த வேண்டும். இதே கடிதம் பிரதமர், ஜனாதிபதிக்கும் போயிருக்கிறது. யாரும் கண்டு கொள்ளவில்லை என்றால் உங்கள் மின்சார நிலா திட்டத்தை நாசமாக்க எங்களாலான எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். உயிர் பெரிதா... இல்லை வேற்று பூமியில் உற்பத்தி செய்ய உள்ள மின்சாரம் பெரிதா என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளவும்.**

**இப்படிக்கு**
**சொன்னதைச் செய்யும்**
**இளைஞர் படை.**

## 2



மகேஸ்வரி டிபன் பாக்ஸ் மூடியை இறுக்கமாய் மூடி அதன் மேல் படிந்திருந்த ஈரத்தைப் புடவைத் தலைப்பால் துடைத்தபடியே முன்னறைக்கு வந்தாள்.

''இந்தாங்க... லஞ்ச் ரெடி...''

''அதைப் பையில் போடு...''

சொன்ன ரங்கநாதன் முன்னறை பூராவும் பரபரப்பாய் எதையோ தேடிக் கொண்டிருந்தார்...

ஆணியில் மாட்டியிருந்த அவருடைய லெதர் பை ஜிப்பைப் பிரித்து டிபன் பாக்சை அதனுள் வைத்துக் கொண்டே மகேஸ்வரி கேட்டாள்.

''ஆபீசுக்கு லேட் ஆச்சு... லேட் ஆச்சுன்னு சுடு தண்ணியைக் காலில் கொட்டின மாதிரி பறந்துகிட்டிருந்தீங்க... ஆபிசுக்குப் போற நேரத்தில் இப்போ என்ன தேடிட்டிருக்கீங்க..?''

"இந்த ஷெல்ப் மேல ஒரு விசிட்டிங் கார்டு வெச்சிருந்தேன் பார்த்தியா...?"

"விசிட்டிங் கார்டா...? யாரோட விசிட்டிங் கார்டு...?"

"கல்யாணத் தரகர் ஒருத்தர் தந்தார்..."

"தரகரைப் பார்த்தீங்களா...? எதுக்கு...?"

"என்னடி கேள்வி இது...? மூக்கும் முழியுமா கல்யாண வயசில் ஒரு பொண்ணை வெச்சிருக்கம்... நாம எதுக்கு தரகரைப் பார்ப்போம்...?"

"அனுவுக்கு படிப்பு முடியலே இன்னும் ஆறு மாசம் இருக்கே...?"

"இப்போ இருந்தே காரியத்தில் இறங்கினாத்தான் அவ படிப்பு முடியவும் நாம கல்யாணத்தைப் பேசி முடிக்கவும் சரியா இருக்கும்..."

"நீங்களாக எல்லாமே செய்யுங்க... கடைசி நேரத்தில் என்னைக் கூப்பிட்டுச் சொல்லுங்க..."

"என்ன கோபமா...?"

"பின்னே...? நேத்திக்கு சாயந்தரம் பூராவும் டிவி பெட்டி முன்னாலேயே உக்காந்து கிடந்தீங்களே...? என்கிட்டே அந்த கார்டைக் காண்பிச்சு கலந்து பேசியிருந்தீங்கன்னா... இப்போ நான் ஞாபகமா எடுத்துத் தந்திருப்பேன்...?"

"நான் இன்னும் தரகர் கிட்டே எதுவும் பேசலை மகேஸ்வரி... ஒரு நண்பர் அறிமுகப்படுத்தி வெச்சார்... விசிட்டிங் கார்டு மட்டும் வாங்கி வெச்சேன்..."

"இப்போ எதுக்கு ஆபிஸ் போற அவசரத்தில் அதைத் தேடிட்டிருக்கீங்க...?"

"இன்னிக்கு நாள் நல்லா இருக்கு... அதைத் தவிர மத்தியான நேரத்தில் ஆபீசில் நான் கொஞ்சம் ப்ரீயா இருப்பேன்... தரகரோட வீடு என்னோட ஆபிசிலிருந்து பக்கம் தான்... போன் பண்ணி சொல்லிட்டா மத்தியானம் அவர் ஆபிசுக்கு வருவார் இல்லையா...?"

அவரோடு மகேஸ்வரியும் சேர்ந்து கொண்டு விசிட்டிங் கார்டைத் தேட ஆரம்பித்தாள்.

சில நிமிஷத் தேடலுக்குப் பின் - டிவி பெட்டியின் மேல் வைத்திருந்த ஸ்டெபிலைசருக்குப் பக்கத்தில் அந்த விசிட்டிங் கார்டு கிடந்தது.

மகேஸ்வரி அதை எடுத்துக் கொடுத்தாள்.

"இதுவான்னு பாருங்க..."

ரங்கநாதன் மலர்ந்த முகத்தோடு அந்த விசிட்டிங் கார்டைக் கையில் வாங்கினார்.

கார்டின் மூலையில் இருந்த போன் நம்பரை கண்ணில் பதித்துக் கொண்டே சொன்னார்.

"இப்பவே இவரைப் போன்ல கூப்பிட்டுப் பேசிட்டுப் போயிடறேன்..."

டீபாயின் மேல் சாதுவாய் உட்கார்ந்திருந்த பச்சை வர்ண பிலிப்ஸ் டெலிபோனின் பொத்தான்களை ஆட்காட்டி விரலால் ஒற்றி எடுத்தார் ரங்கநாதன்.

முதல் எண்ணை அழுத்த அழுத்தவே ரிசீவரில் வெண்கலத்தனமான ஒரு ஆண் குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

"அனு... ஐ லவ் யூ..."

ரங்கநாதன் திடுக்கிட்டுப் போனார்.

"ராஸ்கல்... யாருடா நீ...?"

"அனு... ஐ லவ் யூ..."

திரும்பவும் அதே குரல்.

ரங்கநாதனின் கோபத்தைப் பார்த்துத் திகைத்த மகேஸ்வரி குழப்பத்தில் மூழ்கிய முகத்தோடு அவரைப் பார்த்தாள்.

"யாருங்க போன்ல...? ஏன் கோபமாயிட்டீங்க..."

ரங்கநாதன் இறுகிய முகத்தோடு ரிசீவரை மகேஸ்வரியிடம் நீட்டினார்.

அதை வாங்கி காதோரம் வைத்தாள் மகேஸ்வரி.

"அனு... ஐ லவ் யூ..."

"அனு... ஐ லவ் யூ..."

குறிப்பிட்ட இடைவெளியில் குரல் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டே இருந்தது.

"க்ராஸ் டாக்கா...?"

ரங்கநாதன் தலையாட்டி மறுத்தார்.

"போனை எடுத்தா தன்னைப் போல இந்தக் குரல் வர ஆரம்பிச்சிடுதே...?"

"அனுவோட பேரைத் தெரிஞ்சிகிட்டு எவனோ விளையாடறான்..."

அவர் சொன்ன விநாடி -

குளித்து முடித்து ஈரக் கூந்தலை உலர்த்தியபடி சோப்பு வாசனையோடு வந்த அனு இருவரையும் பொதுவாய்ப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன விஷயம்...? என் பேர் அடிபடுது...?"

ரங்கநாதன் மகேஸ்வரியிடம் இருந்து ரிசீவரை வாங்கி அனுவிடம் கொடுத்தார்.

"எந்த ராஸ்கலோ டெலிபோன்ல விளையாடறான் அனு..."

"அனு... ஐ லவ் யூ..."

"அனு... ஐ லவ் யூ..."

குரல் கேட்டதும் குப்பென்று வியர்த்தாள் அனு.

"ஷிட்... யார் இவன்...?"

"தெரியலை... போன் எடுத்தா இந்த ரெக்கார்டட் வாய்ஸ் வாற மாதிரி செஞ்சிருக்கான்... இந்தக் குரலை உன்னால கண்டு பிடிக்க முடியுதா பாரு..."

"அனு ஐ லவ் யூ..."

"அனு ஐ லவ் யூ..."

புருவங்களைச் சுருக்கிக் கொண்டு சிறிது நேரம் யோசனைக்குச் செலவழித்த அனு உதடுகளைப் பிதுக்கினாள்.

"நல்லா யோசிச்சுப் பாரு... உன் பேர் தெரியுது... போன் நம்பர் தெரியுதுன்னா உனக்குப் பரிச்சயமான ஆளாகத்தான் இருக்கும்... காலேஜ்ல உன் கூடப் படிக்கற பசங்க... கம்ப்யூட்டர் கிளாஸ் போறியே... அங்கே உள்ளவங்க... எல்லாரோட குரலையும் டெலிபோன்ல வர்ற இந்த வாய்ஸோட கம்பேர் பண்ணிப்பாரு..."

மேலும் சில நிமிஷங்களை யோசனையில் செலவழித்த அனு தோல்வி முகத்தோடு நிமிர்ந்தாள்.

"யாருன்னு கண்டுபிடிக்க முடியலையேப்பா..."

ரங்கநாதன் கோபத்தோடு டெலிபோனைப் பார்த்தார்.

"போலீசில் ரிப்போர்ட் பண்ணி இந்த ராஸ்கல் யாருன்னு கண்டுபிடிச்சு முட்டிக்கு முட்டி தட்டணும்..."

மகேஸ்வரி மறுத்தாள்.



"நீங்க கொஞ்சம் சும்மா இருங்க... போலீசுக்கெல்லாம் போக வேண்டாம்..."

"என்னடி சொல்றே...? அப்புறம் இந்த நாயோட குரலை தினமும் கேட்டு ரசிச்சிட்டிருக்கலாம்னு சொல்றியா...?"

"எவனோ குறும்பு செய்யறான்... இதோட நிறுத்திட்டான்னா நாமும் விட்டுடலாம்... தினமும் இந்தத் தொல்லைகள் தொடர்ந்துகிட்டே இருந்தா அதுக்கப்புறமா போலீஸ்கிட்டே ரிப்போர்ட் பண்ணுங்க... போலீஸ் ஸ்டேஷன் படி ஏறி இறங்கறதெல்லாம் நம்மை மாதிரி கவுரவமான குடும்பத்துக்கு ஒத்து வராத விஷயம்... ஆத்திரமும் அவசரமும் படாதீங்க... இப்போ உங்களுக்கு ஆபீசுக்கு நேரம் ஆச்சு... மொதல்ல கிளம்பிப் போங்க..."

"தரகருக்கு போன் பண்ண வேண்டாமா...?"

"நாளைக்குப் பண்ணிக்கலாம்... அல்லது ஆபீசில் போய் போன் பண்ணிக்கங்க..."

மகேஸ்வரி கைப் பையை அவரிடம் நீட்டியபடி சொன்னபோது அனு கூப்பிட்டாள்.

"அப்பா... இப்போ அந்த வாய்ஸ் கேக்கலை..."

ரிசீவரை வாங்கிக் காதில் வைத்தார்.

கொர்ர்ர்ர்ர் சத்தம் மட்டும் தொடர்ச்சியாய் ஒலிக் கொண்டிருந்தது.

கல்யாணத் தரகரின் எண்களை ஒற்றி எடுத்துப் பேசிவிட்டு ஆபீசுக்குக் கிளம்பினார் ரங்கநாதன்.

மகேஸ்வரி மாற்று உடைகளோடும் டவலோடும் பாத்ரூமுக்குள் போக -

அனு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு டெலிபோனை டயல் செய்தாள்.

மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டதும் கிசுகிசுப்பான குரலில் பேசினாள்.

"விஜய்... நான்தான் அனு பேசறேன்..."

"ஹாய்..."

"ஹாய்யாவது மண்ணாங்கட்டியாவது... இதெல்லாம் உங்களுக்கே நல்லா இருக்கா...? எங்க வீட்டு டெலி

போனை எடுத்தா, அஜு... ஐ லவ் யூ.........அஜு... ஐ லவ் யூ...ன்னு உங்க வாய்ஸ் திரும்பத் திரும்ப வருது... போனை அப்பாதான் எடுத்தார். போலீசுக்குப் போறேன்னு தாட் பூட்ன்னு குதிக்க ஆரம்பிச்சுட்டார்... தெரியுமா...?''

கோபத்தோடு அஜு குமுறலாய்ப் பேசிக் கொண்டிருக்க - மறுமுனை விஜய் அவள் கோபத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

## 3



**வ**சிஷ்டும், சிநேகாவும் பதட்டத்தோடு அந்த லெட்டரைப் பார்த்துக் கொண்டிருக்க - கடிதத்தை முழுதாய்ப் படித்து முடித்த பின்னர் அலட்சிய முகத்தோடு நிமிர்ந்தார் அஜய்சர்மா.

புன்னகையோடு சொன்னார்.

''இந்தக் கடிதத்தை நாம் பெரிது படுத்த வேண்டியதில்லை வசிஷ்ட்...''

சிநேகா திகைப்போடு கேட்டாள்.

''ஏன் ஸார்... அப்படிச் சொல்லுகிறீர்கள்...?''

''இதுபோல பொது ஜனம் சம்பந்தப்பட்ட தேசியத் திட்டத்தை செயல்படுத்தும் போது இந்த மாதிரி வெற்று மிரட்டல்கள் வருவது சகஜம்தான் சிநேகா...''

''இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் இதை அலட்சியப்படுத்தக் கூடாது என்று தோன்றுகிறது ஸார்... ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குக் கூட இதே கடிதம் சென்று இருக்கிறதாம்...''

மாலிக் சிரித்தார்.

''என் சர்வீசில்... இது மாதிரி பல கடிதங்களைப் பார்த்து விட்டேன்... இதை சட்டை செய்ய வேண்டாம் வசிஷ்ட்...''

''அப்படியானால் இதைக் குப்பைக் கூடைக்கு கொடுத்து விடலாமா ஸார்...?''

வைத்யா மறுத்தலாய்த் தலையாட்டியபடியே சொன்னார்.



''நோ... நோ... டெலிபாட்ச் செக்ஷன் மூலமாக வந்திருக்கும் இந்தக் கடிதம் பற்றி போலீசில் தெரிவிக்க வேண்டியது நமது கடமை... அதே சமயம் இதை சீரியஸாக எடுத்துக் கொண்டு மனசில் பயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்பதே நான் சொல்ல நினைக்கும் விஷயம்...''

''வைத்யா ஈஸ் கரெக்ட்... விண்கலம் புறப்பட இன்னும் சில மணி நேரமே உள்ள நிலையில் இதைப்போன்ற கடிதங்களைப் பார்த்து நம் மனம் தடுமாறக் கூடாது...''

அஜய்சர்மா சொல்ல - மாலிக் தொடர்ந்தார்.

''நீ போனில் தகவல் சொல்லி விடு வசிஷ்ட்... முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிஸ்டம் அனைத்தும் ஒழுங்காக இயங்குகின்றனவா என்று நாம் ஒரு முறை பார்த்து விடுவோம்...''

வசிஷ்ட் தலையை அசைத்து விட்டு டெலிபோனை நோக்கிப் போக...

சிநேகாவும் மற்ற மூவரும் லான்ச்சிங் பேடை நோக்கிச் சென்றார்கள்.

''ப்ரஸ் மீட் முடிந்ததா ஸார்...?''

''முடிந்தது...''

''இங்கே கடைசி கட்ட ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன... திட்டப்படி ஒவ்வொரு காரியமும் இம்மி பிசகாமல் நடைபெறுகிறது... நீங்கள் ஐவரும் விண்கலத்தில் ஏறியதும்... ராக்கெட் இயக்கத்தை முடுக்கி விடுவதுதான் பாக்கி...''

அஜய்சர்மா குறுக்கிட்டுச் சொன்னார்.

''இயந்திரங்கள் அனைத்தும் சரியாக இயங்குகின்றனவா என்று விரைவாக ஒரு முறை சோதனை மேற்கொள்ள வேண்டும் மிஸ்டர் ராகேஷ்...''

''கடைசி கட்ட சோதனை சில மணி நேரங்களுக்கு முன்புதான் நடந்தது ஸார்... எவ்ரிதிங் ஆல் ரைட்...''

''நோ... நோ... நீங்கள் அவசியம் இன்னொரு முறை சோதனை மேற்கொள்ள வேண்டும்...''

சொன்னவரைக் கேள்விக் குறியோடு ஏறிட்டார் ராகேஷ்.

"எனி ப்ராப்ளம் ஸார்...?"

"எஸ்..."

தலையாட்டிய அஜய் சர்மா அந்த மிரட்டல் கடித விவகாரத்தை சுருக்கமாக அவருக்கு விவரித்தார்.

"மை குட்னஸ்... நான் இப்பொழுதே மெயின்டெனன்ஸ் டீமைக் கூப்பிட்டு இன்னொரு முறை தரோவாக சோதனை மேற்கொள்ளச் சொல்கிறேன். நம்மிடம் எல்லாவிதமான சோதனை உபகரணங்களும் உள்ளன... இந்தச் சோதனையை மீறி எந்த இயந்திரக் கோளாறும் வர வாய்ப்பில்லை... நீங்கள் எல்லோரும் தைரியமாக இருக்கலாம்..."

சொல்லிவிட்டு உதவி என்ஜினியர் குமாரை நோக்கி வேகமாய்ச் சென்றார் ராகேஷ்.

அடுத்த சில நிமிஷங்களில் உதவி என்ஜினியர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மெயின்டெனன்ஸ் டீம் லான்ச்சிங் பேடை நெருங்கி சோதனைப் பணிகளை சுறுசுறுப்பாக மேற்கொள்ள ஆரம்பித்தது.

போன் செய்து விட்டு வசிஷ்ட் அங்கே வந்து சேர்ந்த சிறிது நேரத்திலேயே செக்யூரிட்டி ஆபிசரும் இன்ஸ்பெக்டர் ஓம்ப்ரகாஷும் டாக்டாக் என்ற ஷூ ஓசையோடு கம்பீர நடைகளில் அங்கே வந்தார்கள்.

"லெட்டர் எங்கே...?" என்றார் ஓம்ப்ரகாஷ்.

வசிஷ்ட் தன் கையிலிருந்த அந்த மிரட்டல் கடிதத்தை அவரிடம் தந்தான்.

"இந்த ப்ராஜெக்ட்டுக்கு எதிராக இது மாதிரி மிரட்டல் கடிதம் ஏதாவது இதற்கு முன்னால் வந்திருக்கிறதா...?

மறுத்தலாய்த் தலையை அசைத்தார்கள்.

"வந்ததில்லை இன்ஸ்பெக்டர்... இப்படி ஒரு லெட்டர் வர்றது இதுதான் முதல் தடவை..."

"லெட்டர் எப்போது வந்தது...?"

"சற்று முன்னர்தான்..."

"தபால் மூலம் வந்ததா...?"

"கூரியர் தபால் மூலம் வந்தது..."

ஓம்ப்ரகாஷ் நிமிர்ந்தார்.



"கூரியர் தபால் மூலமாகவா...? அப்படியானால் ரிசிப்ட் காகிதம் தந்திருப்பார்களே...?"

வசிஷ்ட் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த அந்த ரிசிப்டை அவரிடம் தந்தான்.

**FAST JET**
**COURIER SERVICE**

கொட்டை எழுத்துகள் கண்ணில் தெரிந்தன.

"கூரியர் சர்வீசில் லெட்டர் புக் பண்ணினால் ஃப்ரம் அட்ரஸ் இல்லாமல் எடுக்க மாட்டார்களே...? கவர்லேயோ... ரிசிப்ட்டிலேயோ ஃப்ரம் அட்ரஸ் ஏதாவது இருக்கிறதா...?"

"இல்லை இன்ஸ்பெக்டர்... இந்த ஃபாஸ்ட் ஜெட் கூரியர் சர்வீஸ் லோக்கலில் மட்டும் சர்வீஸ் தருகிற ஒரு சிறிய கம்பெனி... ரூல்செல்லாம் ஸ்ட்ரிக்ட்டாக பாலோ செய்ய மாட்டார்கள்.... அப்படியே ஃப்ரம் அட்ரஸ் கண்டிப்பாக தர வேண்டும் என்று கூரியர் கம்பெனியில் சொன்னாலும்... இந்த மாதிரி லெட்டர் அனுப்புபவன் போகஸ் அட்ரஸ்தான் தருவான்..."

வசிஷ்ட் சொல்ல -

அதை ஆமோதித்த ஓம்ப்ரகாஷ் தொடர்ந்து சொன்னார்.

"அவன் போகஸ் அட்ரஸ்தான் தருவான் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை... ஆனால் அப்படி தருகிற போகஸ் அட்ரஸ் மூலமாகக் கூட சில சமயங்களில் க்ளு கிடைப்பது உண்டு..."

சொல்லிக் கொண்டே அந்த லெட்டரையும் ரிசிப்ட்டையும் உற்றுப் பார்த்தபடி அப்படியும் இப்படியும் புரட்டிக் கொண்டிருந்தார் ஓம்ப்ரகாஷ்.

விசேஷமாய் எந்த க்ளுவும் அவர் கண்ணுக்குத் தட்டுப்படாமல் போகவே - ஏமாற்றத்துடன் அவர்களிடம் மேற்கொண்டு விசாரணையை தொடர்ந்தார்.

"ஒரு நக்ஸலைட் க்ரூப்பின் கைங்கர்யம் போல இருக்கிறது... இந்த விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் உள்ளே உள்ள சில நபர்களைக் கூட ப்ரெயின் வாஷ் செய்து தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புகள்

இருக்கின்றன... இந்தத் திட்டத்தை செயல்பட விடாமல் செய்ய வேண்டும் என்றால் அவர்களுக்கு ஒரே வழிதான் இருக்கிறது...''

''என்ன வழி...?''

''இயந்திரக் கோளாறு ஏற்படுத்துவது...''

வைத்யா மறுத்தார்.

''அதற்கு வாய்ப்பே இல்லை இன்ஸ்பெக்டர்...''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்...?''

''சீஃப் என்ஜினியர் ராகேஷ் சற்று முன்னர்தான் கடைசி கட்ட சோதனையை மேற்கொண்டார்... எல்லாமே சரியாக உள்ளது...''

''ரொட்டீன் செக்கப்தானே...? பணியாளர்கள் அசட்டையாய் இருந்து விட வாய்ப்புகள் உள்ளன...''

மாலிக் தலையை அசைத்தார்.

''நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான்... அதனால்தான் சீஃப் என்ஜினியர் ராகேஷைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி மீண்டும் ஒரு சோதனையை மேற்கொள்ளுமாறு சொல்லியுள்ளோம்...''

அஜய்சர்மா தொடர்ந்தார்.

''ஒரு மெயின்ட்டனன்ஸ் டீம் அப்போதே சோதனையைத் தொடங்கி விட்டது... ஒரு சின்ன ஸ்க்ருவைக் கூட விட்டு வைக்காமல் தரோவாக சோதனையை செய்து முடிக்கப் போகிறார்கள்...''

''மெயின்ட்டனன்ஸ் டீம் அமைத்தது சீஃப் என்ஜினியர் ராகேஷ்ஷா...?''

''ஆமாம்...''

''நான் அவரிடம் பேசிப் பார்க்க வேண்டுமே...''

ஓம்ப்ரகாஷ் சொன்ன விநாடி -

மெயின்ட்டனன்ஸ் டீமை சேர்ந்த அசிஸ்டெண்ட் என்ஜினியர் ஒருவர் அந்த வழியே சென்றார்.

வசிஷ்ட் அவரைக் கூப்பிட்டான்.

''எக்ஸ்க்யூஸ் மீ... பரிசோதனை முடிந்ததா...?''

அந்த ஏ.ஈ. தலையை அசைத்தார்.

''முடிந்து விட்டது...''



''சீ.ஈ. ராகேஷ் எங்கே...?''

''பரிசோதனை ரிப்போர்ட்டைத் தருவதற்காக அவரைத் தேடித்தான் போய்க் கொண்டிருக்கிறேன்...''

''ரிப்போர்ட் என்ன சொல்கிறது...?''

''எவ்ரிதிங் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்...''

''தரோவான சோதனை மேற்கொண்டீர்களா...?''

''மிக மிக தரோவாக சோதனையை மேற்கொண்டோம்... இந்த சோதனைக்குத் தப்பி எந்த இயந்திரக் கோளாறும் நேரவே முடியாது...''

''ஓக்கே... இன்ஸ்பெக்டர் ஒருவர் விசாரணை செய்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்று உங்கள் சீ.ஈ.யிடம் தெரியப்படுத்தி உடனே அவரை இங்கே வரச் சொல்லுங்கள்...''

''ஓக்கே ஸார்...''

அந்த அசிஸ்டெண்ட் என்ஜினியர் நகர்ந்து சென்றார்.

பத்தே நிமிஷத்தில் அந்த இடத்துக்கு மீண்டும் திரும்பி வந்தார்.

கேட்டார்.

''ராகேஷ் ஸார்... இங்கே வந்தாரா...?''

''வரவில்லையே...? அவரிடம் இன்ஸ்பெக்டர் காத்திருக்கிற விஷயத்தைச் சொன்னீர்களா...?''

''அவரை நான் இன்னும் பார்க்கவே இல்லை ஸார். கேபின்ல இருக்கிறேன் என்று சொன்னார்... கேபினில் போய்ப் பார்த்தால் சேர் காலியாக இருக்கிறது... டாப் ஃப்ளோர் போய்ப் பார்த்தேன்... அங்கேயும் அவர் இல்லை. இண்டர்காம் அடித்து செக்யூரிட்டி ஆபீசில் கேட்டேன். அவருடைய மூவ்மெண்ட்ஸ் பற்றி எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்... அதனால் தான்... திரும்ப இங்கேயே வந்து விட்டேன்...''

''ராகேஷ் இங்கேயும் வரவில்லையே...''

அஜய்சர்மா யோசனை வரிகள் விழுந்த நெற்றியோடு சொல்ல - செக்யூரிட்டி ஆபீசர் இண்டர்காமை நெருங்கி ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தார்.

''ஹலோ... நான் செக்யூரிட்டி ஆபீசர் பேசுகிறேன். சீஃப் என்ஜினியர் ராகேஷ் கேம்பஸை விட்டு வெளியே சென்றாரா...?''

''இல்லை ஸார்...''

''அவரை நான் உடனே பார்க்க வேண்டும்... அவர் கேம்பஸுக்குள் எங்கே இருக்கிறார் என்று உடனடியாய் எனக்குத் தகவல் வர வேண்டும்...''

''ஓக்கே ஸார்...''

இரண்டு முனைகளிலும் ரிசீவர் கீழே வைக்கப்பட்டது. செக்யூரிட்டி ஆபீசர் திரும்பி வந்தார்.

''சி.ஏ. ராகேஷ் கேம்பஸுக்குள்தான் எங்கேயோ இருக்கிறார்... அவர் எங்கே இருக்கிறார் என்ற தகவல் இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடும்...''

சயன்ஸ் டிபார்ட்மெண்ட்டில் இருந்து வந்த ஆசாமி ஒருவர் வைத்யா, அஜய்சர்மா, மாலிக் ஆகியோரைப் பார்த்துச் சொன்னார்.

''விண்கலத்தை செலுத்துவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டே இருக்கிறது... நீங்கள் ஐந்து பேரும் லேபரட்டரிக்குச் செல்ல வேண்டும் என்று டைரக்டர் கேட்டுக் கொண்டார் ஸார்...''

''நீங்கள் உங்கள் காரியங்களைத் தொடரலாம்... இயந்திரங்கள் அனைத்தும் மிகச் சரியாக இயங்குகின்றன என்று மெயின்டனன்ஸ் டீம் சொல்லி விட்டதே... ஆகவே பயப்பட ஒன்றுமில்லை... சி.ஏ. ராகேஷிடம் மேற்கொள்ள வேண்டிய ஃபார்மல் என்கொயரியை நானும் செக்யூரிட்டி ஆபிசரும் பார்த்துக் கொள்கிறோம்...''

அவர்கள் இன்ஸ்பெக்டர் ஓம்பிரகாஷிடம் விடை பெற்றார்கள்.

செக்யூரிட்டி ஆபிசரும் ஓம்பிரகாஷும் அருகாமை அறைக்குச் சென்றார்கள்.

விண்கலம் கிளம்பப் போகிற பரபரப்பில் எல்லோரும் இயங்கிக் கொண்டிருக்க - நிமிஷங்கள் கூட்டம் கூட்டமாய் மடிந்தன.

ராகேஷ் பற்றின தகவல் இன்னும் வராமல் இருக்கவே ஓம்பிரகாஷிடம் கவலை ரேகைகள் பரவ ஆரம்பித்தன.

''ராகேஷோடு ஊமை தம்பித்தான் இப்போது விண்கலம் கிளம்பிக் கொண்டிருக்கிறது... ஆனால் அந்த ராகேஷ் என்கொயரிக்கு சிக்காமல் தலைமறைவாய் இருக்கிறார்



லாஞ்சிங் ஓக்கேன்னு அந்த டீம் தந்த ரிப்போர்ட்டை நாம் நம்புவதா வேண்டாமா என்று சந்தேகமா உள்ளது...''

அவன் சொன்ன போது -

லாஞ்சிங் பேடு மைதானம் ஏராளமாக பிரகாசத்தில் மூழ்கியது.

காது மடல்களைக் காயப்படுத்துகிற அளவுக்கு பெரும் இரைச்சல்.

அஜய்சர்மா, வைத்யா, மாலிக், வசிஷ்ட், சிநேகா மற்றும் தானியங்கி அணு மின் நிலையம் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு ராக்கெட் குபீரென்று மேல் நோக்கி சீறியது.

லாஞ்சிங் பேடில் நின்றிருந்த இதர விஞ்ஞானிகள் வெற்றிகரமாக ராக்கெட் ஏவப்பட்ட சந்தோஷத்தைக் கைகளைத் தட்டிப் பகிர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் சந்தோஷத்தில் மூழ்கிக் கொண்டிருந்த அதே விநாடியில் -

ஒரு செக்யூரிட்டி கார்டு ஓம்ப்ரகாஷும் செக்யூரிட்டி ஆபிசரும் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

''சீஃப் என்ஜினியர் ராகேஷ் கிடைத்து விட்டார் ஸார்...''

''இஸிட்...?''

''எங்கே இருக்கிறார்...?''

''ஜெனரேட்டர் ரூமுக்குப் பின்புறம்...''

''அங்கே என்ன செய்கிறார்...?''

எச்சில் விழுங்கிக் கொண்டே சொன்னான் அந்த செக்யூரிட்டி கார்டு.

''அவர்... அங்கே... பிணமாகக் கிடக்கிறார் ஸார்...''

அதிர்ச்சி தாக்கிய முகங்களோடு நிமிர்ந்தார்கள் ஓம்ப்ரகாஷும், செக்யூரிட்டி ஆபிசரும்.

''பி... பிணமாகக் கிடக்கிறாரா...?''

''எஸ் ஸார்...''

சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த மடிக்கப்பட்ட காகிதத்தை அவர்களிடம் நீட்டினான்.

''இந்தக் கடிதம் அவருக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டு இருந்தது...''

ஓம்ப்ரகாஷ் அதை வாங்கிப் படித்தார்.

கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்ட கடிதம்

மதிப்பதற்குரிய காவல் துறை அதிகாரி அவர்களுக்கு,

இளைஞர் படையின் வீர வணக்கங்கள்.

எங்கள் மிரட்டலை அலட்சியப் படுத்தியதால் அந்த விஞ்ஞானிகளும், அரசியல்வாதிகளும் பாவம் உங்களுக்கு ஏராளமான தலைவலியைத் தந்து விட்டார்கள். எங்களை சர்வ சாதாரணமாக எல்லோரும் எண்ணி விட்டதாலேயே இந்த பதிலடி. தானியங்கி அணு மின் நிலையத்தை வடிவமைத்துக் கொடுத்த சீனியர் என்ஜினியர் ராகேஷை விண்கலம் இந்த மண்ணை விட்டுப் புறப்பட்ட அதே விநாடியில் துவம்சம் செய்து விட்டோம். இத்தோடு நிற்கப் போவதில்லை இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு. உங்களால் எதுவும் செய்ய முடியாது. எங்கள் அட்டகாசம் இனி விண்ணில் தொடரும்.

இப்படிக்கு
சொன்னதைச் செய்து கொண்டிருக்கும்
இளைஞர் படை.

## 4



### 'DINNER SPOT'

நீல நிற நியான் விளக்கு குளுகுளுப்பாய்க் கண்களை நிறைத்துக் கொண்டிருக்க - குளிர் கண்ணாடிக்குப் பின்னே மங்கலான வெளிச்சத்துடன் விளக்குகள் தெரிந்தன.

மேஜை நாற்காலிகளும் அவற்றுக்கிடையே நகரும் உருவங்களும் மசமசப்பாய்த் தெரிந்தன.

PUSH என்று சொல்லும் கதவைத் தள்ளினால் ஏ.சி குளிர் மொத்தமாய் அள்ளிக் கொள்ளும்.

அந்த ரெஸ்டாரெண்டின் மூலை மேஜையை ஆக்ரமித்திருந்தார்கள் அனுவும், விஜய்யும்.



அனு சற்றே படபடப்பான விழிகளோடு விஜய்யையே பார்த்துக் கொண்டிருக்க - அவன் புன்னகையோடு கேட்டான்.

"என்ன சாப்பிடறே...?"

அவள் படபடப்பு மாறாத முகத்தோடு சொன்னாள்.

"நாம இங்கே சாப்பிடறதுக்காக வரலை. பேசறதுக்காக வந்திருக்கோம்."

"வாஸ்தவம்தான்... ஆனா எதையாவது ஆர்டர் பண்ணி சாப்பிட்டால்தான் நாம இங்கே உட்கார்ந்திருக்க முடியும்..."

"எதையாவது நீங்களே ஆர்டர் பண்ணுங்க..."

"காபி...?"

"நான்தான் சொல்லிட்டேனே... ஏதோ ஒண்ணை பண்ணித் தொலையுங்க..."

"ரொம்பக் கோபமா இருக்கே போலிருக்கே...?"

"ஆமா காலையில இருந்தே கோபம்தான்... உங்களை எப்படா பார்க்கலாம்... கொட்டித் தீர்க்கலாம்னு காத்திருந்தேன்... உங்க கிட்டே கொஞ்சம்கூட சீரியஸ்நெஸ்சே கிடையாது..."

"சிரிச்சுப் பேசினா சீரியஸ்நெஸ் இல்லாதவன்னு அர்த்தமா...?"

"நீங்க பாட்டுக்கு காலங்கார்த்தால டெலிபோன்ல சில்மிஷம் பண்ணி அனு ஐ லவ் யூன்னு வாய்ஸ் வர வெச்சிட்டீங்க... அதுக்கு என்ன அர்த்தமாம்...?"

"டெலி கம்யூனிகேஷன்ல டிஸ்டிங்ஷன் வாங்கின கிராஜுவேட் நான்... என்னோட துரதிர்ஷ்டம்... இன்னும் ஒழுங்கான வேலை கிடைக்காம கிராஜுவேட்டா உக்காந்திருக்கேன்... நான் மத்த பசங்களைப் போல பேப்பர்ல லவ் லெட்டர் எழுதினா நல்லாவா இருக்கும்...? அதனாலதான் எலக்ட்ரானிக் மயமாகிவிட்ட டெலிபோன் லைனில் இன்டரப்ட் பண்ணி மின்னியல் சில்மிஷம் செஞ்சேன்..."

"சட்டப்படி இதெல்லாம் குற்றம்... தெரியுமா...?"

"நான் என்ன கொலை செஞ்சேனா... கொள்ளை அடிச்சேனா...? இதெல்லாம் மன்னிக்கக் கூடிய குறும்பான குற்றங்கள்..."

''அப்பா போலீசுக்குப் போறேன்னு குதிக்கார... அப்படிப் போயிருந்தாங்கன்னா என்னாகறது...? காதல் கிட்டே குறும்பு பண்ணியிருக்கார்... பாவம் இளரத்தம் அப்படின்னு மன்னிச்சு விட மாட்டார்... லாக்கப்ல போட்டு முட்டிக்கு முட்டி தட்டி நொறுக்கிடுவாங்க...''

''அவ்வளவு கலாட்டாவில் நான் போலீஸ் கிட்டே மாட்டிக்க மாட்டேன் அனு... இண்டரப்ஷன் எங்கிருந்து வருதுன்னு யாரும் கண்டுபிடிக்க முடியாது... வேவ் ஸ்கேட்டர்ன்னு சின்ன சர்க்யூட்டை டிசைன் பண்ணி அதன் உதவியோட இந்த சில்மிஷத்தை செஞ்சேன்... ட்ரேஸ் பண்ண நினைக்கிறவங்க குழம்பிப் போயிடுவாங்க... காரணம்... வேவ் ஸ்கேட்டர் கண்காணிக்க முயல்பவர்களை திசை திருப்பும் வகையில் அவுட் கோயிங் சிக்னல்களின் பாதையை சிதறடிச்சிடும்...''

''இதுக்கெல்லாம் உங்களுக்கு எப்படி காசு கிடைக்குது...?''

''எலக்ட்ரானிக் எப்பவுமே டெட் சீப் அனு... அம்பது பைசா எழுபத்தஞ்சு பைசாவ கூட சில காம்ப்போனண்ட் கிடைக்கும்னு சொன்னா நீ நம்புவியா...?''

''சிப்பெல்லாம் விலை அதிகமா இருக்கும் இல்லையா...?''

''தெரிஞ்ச சர்க்கிள்ல டிவி டிரான்சிஸ்டர் எல்லாம் ரிப்பேர் பண்ணித் தர்றேனே... அதில் கொஞ்சம் பைசா தேறும்...''

''இப்படியே எத்தனை நாளைக்கு இருப்பீங்க...?''

''நான் என்ன செய்யட்டும்...?''

''என்ன செய்யாம இருக்கட்டும்னு கேளுங்க...? இந்த மாதிரி சில்மிஷத்தை எல்லாம் விட்டுட்டு சீரியசா வேலை தேடுங்க...''

''நான் முயற்சி பண்ணிட்டுத்தான் இருக்கேன்... இன்னும் வேலை அமையலையே...''

''கடைசி வரைக்கும் அமையாமலே போயிட்டா நாம எப்படி வாழறதாம்...?''

''நீ ஓவரா பயப்பட வேண்டாம்... என் திறமை மேல எனக்கு நம்பிக்கை இருக்கு... இன்னும் உனக்கு காலேஜ் படிப்பு முடியவே ஆறு மாசம் இருக்கு... அதுக்கப்புறம் உனக்கு கல்யாணப் பேச்சு எடுக்க இன்னொரு ஆறு



மாசமாவது ஆகும்... அதுக்குள்ளே எனக்கு ஒரு நல்ல வேலை கிடைச்சிடாதா என்ன...?'' அப்படிக் கிடைச்சிட்டா அந்த நிமிஷமே நான் நேரில் வந்து உங்க அப்பாவைப் பார்த்து பேசிடுவேன்...''

''அதுக்குள்ளே எனக்கு கல்யாணம் முடிஞ்சு இடுப்புல ஒண்ணு மடியில் ஒண்ணு வெச்சிருப்பேன்...''

சற்றே தவிப்போடு அனு சொல்ல - விஜய் நிஜமான திகைப்போடு நிமிர்ந்தான்.

''அனு... என்ன சொல்றே...?''

''அப்பா எனக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சிட்டார்...''

''இன்னும் உனக்கு படிப்பே முடியலையே...?''

''இப்ப இருந்தே பார்க்க ஆரம்பிச்சா பேசி முடிவு பண்ணி காலேஜ் முடியறப்போ கல்யாணத்தையும் நடத்தி முடிச்சிடலாம்ன்னு அவர் ப்ளான் பண்றார்... நாளைக்கே அவர் ஒரு வரனைப் பார்த்து என்கிட்டே சம்மதம் கேட்டா நான் என்ன சொல்ல முடியும்...? நீங்க ஒரு வேலையில் இருந்தாலாவது அவர் கிட்டே உங்களை கம்பீரமா அறிமுகப்படுத்த முடியும்...''

விஜய் கவலை வயப்பட்டான்.

சிறிது நேர யோசனைக்குப் பின் - வார்த்தைகளை விடுத்தான்.

''அனு... இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே நான் எப்படியாவது ஒரு நல்ல வேலையில் ஒட்டிக்கிறேன்... அது வரைக்கும் நீ எப்படியாவது சமாளி...''

''சமாளிக்கிறேன் விஜய்...''

சொல்லிக் கொண்டே மணிக்கட்டைக் கவ்வியிருந்த வாட்சைப் பார்த்து விட்டு பரபரத்தாள் அனு.

''இன்னிக்கு உங்க கிட்டே இந்தப் பிரச்சினையைப் பத்தி பேசணும்கறதுக்காகவே நான் கம்ப்யூட்டர் கிளாசை கட் பண்ணிட்டு இங்கே வந்தேன்... நேரமாச்சு... நான் கிளம்பறேன்...''

பேரர் கொண்டு வந்து தந்த காப்பிக் கோப்பைகள் காலியாகி இருக்க இருவரும் எழுந்தார்கள்.

பில் தொகையைப் பே பண்ணிவிட்டு - வெளியே வந்தான் விஜய்.

வாகனங்கள் விரைந்து கொண்டிருந்த அந்தச் சாலையில் சில்லென்று பனி பெய்து கொண்டிருந்தது.

அனுவோடு அருகாமை பஸ் ஸ்டாப்புக்கு நடந்தான்.

மூன்று நிமிடக் காத்திருப்புக்குப் பின் - ஒரு டவுன் பஸ் சதுர முகம் காட்டியது.

அனு படிகளில் ஏறிக் கொண்டு "பை..." சொன்னாள். ஸ்டாப்பிங்கை விட்டு பஸ் நகர்ந்து சென்றது.

அவளுக்குக் கையசைத்து விட்டு - திரும்பி நடக்க ஆரம்பித்தவனின் தோளில் ஒரு கை விழுந்தது.

விஜய் திரும்பிப் பார்த்தான்.

குள்ளமாய், குண்டாய் ஒரு ஆசாமி நின்றிருந்தான்.

இவனைப் பார்த்து வரிசை தப்பின பற்கள் முழுவதும் தெரிய அகலமாய்ப் புன்னகைத்தான்.

"ஹலோ விஜய்..."

விஜய் தயக்கமாய் "ஹலோ..." சொல்லிவிட்டு தயக்கம் விலகாத குரலில் தொடர்ந்து கேட்டான்.

"நீங்க யாருன்னு எனக்குத் தெரியலையே...?"

"எஸ்... உன்னை எனக்குத் தெரியும்... ஆனா என்னை உனக்குத் தெரியாது... உன்கிட்டே என்னை அறிமுகப் படுத்திக்கத்தான் இந்தச் சந்திப்பு..."

விஜய் குழப்பத்தோடு அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க - அவன் வார்த்தைகளைத் தொடர்ந்தான்.


"நாம எங்கேயாவது உக்கார்ந்து பேசலாமே...?"

"பே..." பேசலாம்... முதலில் நீங்க யாருன்னு சொல்லுங்க..."

"என் பேர் முகேஷ்... நான் டெலிபோன் டிபார்ட்மெண்ட்டில் வேலை செய்யறேன்..."

அவன் சொல்ல - விஜய்யிடம் மெல்லிய அதிர்ச்சி உடல் பூராவும் பரவிற்று.

## 5



இன்ஸ்பெக்டர் ஓம்ப்ரகாஷும், செக்யூரிட்டி ஆபீசர் அமர்நாத்தும் ஜெனரேட்டர் ரூமை அடைந்த போது -



பிரமாண்டமான ஜெனரேட்டர் இயந்திரங்கள் ஏராளமான இரைச்சலைத் துப்பிக் கொண்டிருந்தன.

ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்திருந்த அந்த ப்ளாக்கின் பின்புறமாய் ஓம்ப்ரகாஷைக் கூட்டிச் சென்றார் அமர்நாத்.

இந்த நிமிஷம் நிறைய செக்யூரிட்டி கார்டுகளின் நடமாட்டம் அங்கே இருந்தது.

அவ்வளவாய் வெளிச்சம் இல்லாத அந்தப் பகுதிக்கு வயர்களை இழுத்து தற்காலிக பல்புகளை எரிய விட்டிருந் தார்கள்.

நீலமும், மஞ்சளுமாய் மொசுகுரி விளக்குகள்... சோடியம் வேபர் லேம்புகள்.

குப்பை கூளங்கள் இரைந்து கிடக்க - ஒரு மூட்டுதர் அருகே மடங்கிக் கிடந்தார் ராகேஷ்.

வழுக்கைத் தலை அவரைப் பளிச்சென்று அடையாளம் காட்டியது. சிமெண்ட் நிற கோட் பூராவும் ரத்தத்தில் சொத சொதவென ஊறிக் கிடந்தது.

அருகில் நெருங்கிக் குனிந்து பார்த்த ஓம்ப்ரகாஷ் நிமிர்ந்து அமர்நாத்திடம் சொன்னார்.

"பிஸ்டலால் மார்புப் பகுதியை சுட்டிருக்கிறார்கள்..."

"யெஸ்... ஜென்டில்மேன்..."

"இட் ஷோஸ் யுவர் செக்யூரிட்டி சிஸ்டம் ஈஸ் கெட்டிங் வீக்..."

"இன்ஸ்பெக்டர்...?"

"சுலபமாக இந்த கேம்பஸுக்குள்ளே பிஸ்டலை கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் செக்யூரிட்டி வீக் என்றுதானே அர்த்தம்...?

"சுலபமாகக் கொண்டு வந்திருப்பார்கள் என்பதை என்னால் ஒத்துக் கொள்ள முடியாது... மெயின் என்ட்ரன் சிலேயே மெட்டல் டிடெக்டர் பொருத்தப்பட்டுள்ளது. உள்ளே வருபவர்களை நுழைகிற வினாடியிலேயே மெட்டல் டிடெக்டர் லேஸ்ஸ் அலசிப் பார்த்து விடும்... சந்தேகத்துக்கு இடமான பொருட்கள் உள்ளே நுழைபவர்களிடம் இருந்தால் மானிட்டரிங் ரூமில் அலர்ட் டிஸ்ப்ளே சத்தமில்லாமல் வந்து விடும்..."

''நான் இந்த கேம்பஸுக்குள் நுழைகிறபோது கூட உங்கள் செக்யூரிட்டி சிஸ்டம் அலர்ட் டிஸ்ப்ளே தந்திருக்குமா...?''

''நிச்சயமாக... உள்ளே வருகிறவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பதால் அந்த அலர்ட் டிஸ்ப்ளேயை செக்யூரிட்டிகள் கன்சிடர் பண்ணியிருக்க மாட்டார்கள்...''

''டிஸ்ப்ளேயை வாட்ச் பண்ணுவது யார்...?''

''ஒரு செக்யூரிட்டி கார்டுதான்...''

''ஒருவரால் ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்திருக்க முடியாது... அவர் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசந்த சந்தர்ப்பங்களில் யாராவது பிஸ்டலோடு நுழைந்திருக்கலாமே...?''

''ஒருவர் என்றால் ஒரே ஆள் மானிட்டர் முன்னால் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பார் என்று சொல்லவில்லை... டியூட்டியில் இருக்கிற செக்யூரிட்டி கார்டுகளில் யாரோ ஒருவர் இருபத்திநான்கு மணி நேரமும் மாறி மாறி உட்கார்ந்து மானிட்டரை வாட்ச் பண்ணிக் கொண்டிருப்பார்கள்...''

''அதை மீறி எப்படி ஒருவன் பிஸ்டலோடு உள்ளே நுழைந்து ராகேஷ்லஷைக் கொன்று இருக்கிறான்...?''

''அதுதான் புரியவில்லை... இன்ஸ்பெக்டர்...''

''அலர்ட் டிஸ்ப்ளேக்களை ரெக்கார்ட் செய்து வைக்கக் கூடிய வசதி இருக்கிறதா...? ஒருக்கால் செக்யூரிட்டி கார்டுகள் கவனக்குறைவினால் நோட் பண்ணாமல் விட்டிருந்தால் திரும்பப் பார்க்கிற மாதிரி வசதி... உள்ளதா...?''

''இருக்கிறது...''

''இன்டர்காமில் பேசிப் பாருங்கள் மிஸ்டர் அமர்நாத்...''

அமர்நாத் பவுச்சில் சொருகியிருந்த கார்டு லெஸ் செட்டைக் கையில் எடுத்து சில பொத்தான்களைத் தட்டினார்.

''ஹலோ... நான் அமர்நாத் பேசுகிறேன்...'' என்று ஆரம்பித்து விஷயத்தைச் சொன்னார்.

ஐந்தாறு நிமிஷக் கழியலுக்குப் பின் - பதில் வந்தது.



இன்டர்காம் மூலமாக அதைக் காதில் வாங்கி விட்டு - வாங்கிய செய்தியை ஓம்ப்ரகாஷிடம் கொட்டினார்.

''கம்ப்யூட்டரில் ரீப்ளே போட்டுப் பார்த்து விட்டார்கள் இன்ஸ்பெக்டர்... இந்த மூன்று மாதத்தில் கவனிக்கப்படாத அலர்ட் டிஸ்ப்ளே எதுவும் இல்லை...''

ஓம்ப்ரகாஷ் சில விநாடி யோசனைக்குப் பின் சொன்னார்.

''மெயின் என்ட்ரன்சை ப்ளாக் பண்ணி விடுங்கள்...''

''அப்பொழுதே பண்ணியாயிற்று...''

''கட்டயன் துப்பாக்கியோடு உள்ளேதான் இருக்க வேண்டும்... தவிர்க்க முடியாமல் வெளியே செல்லும் ஆட்களை இரண்டு மடங்கு உஷார்தனத்தோடு சோதித்து அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்... அதற்கு இடையில் உள்ளே உள்ள ஆட்களை டிபார்ட்மெண்ட் டிபார்ட்மெண்டாகப் போய் சோதனை நடத்திப் பார்த்து விடலாம். கொலையாளியை நிச்சயம் மடக்கி விடலாம்.

செக்யூரிட்டி ஆபீசர் அமர்நாத் தலையசைத்தார்.

''நான் ஏற்பாடுகளை செய்கிறேன் இன்ஸ்பெக்டர்...''

அவர் நகர்ந்து செல்ல - ஓம்ப்ரகாஷ் இரைச்சலை வெளியிட்டுக் கொண்டிருந்த ஜெனரேட்டர் ரூமை நோக்கி நடந்து சென்றார்.

அகலமான ஷட்டர் கதவுகள் மேலேறியிருக்க அதனுள் பிரவேசித்தார்.

ராட்சஸ என்ஜின்கள் டீசல் நாற்றத்தோடு அவரை வரவேற்றன.

உள்ளே இருந்த அழுக்கான கேபினில் கெச்சலான தோற்றத்தோடு உட்கார்ந்திருந்தார் எலக்ட்ரிக்கல் சூபர்வைசர்.

ஓம்ப்ரகாஷைப் பார்த்ததும் கேபினை விட்டு வெளியே வந்தார்.

''நீங்கள்தான் இந்த ஜெனரேட்டர் அறையின் சூபர்வைசரா...?''

''ஆமாம்... ஸார்...''

''எவ்வளவு வருடங்களாக இங்கே இருக்கிறீர்கள்...''

''பத்து வருடங்களாக...''

''இந்த செக்ஷனில் மொத்தம் எத்தனை 
இருக்கிறார்கள்...?''

''என்னைத் தவிர இரண்டு மெக்கானிக்கு
இருக்கிறார்கள்...''

''அவ்வளவுதானா...?''

''பிரேக் டவுன் சமயங்கள் தவிர மற்ற நேரங்க
அதிக வேலை இருக்காது... இரண்டு மெக்கானிக்குகளு
ஒரு சூபர்வைசரும் இந்த செக்ஷனுக்குப் போதுமானது.

''இந்த கேம்பசில் மிகவும் ஒதுக்குப் புறமாக உள்ள
இந்த செக்ஷன்தான் என்று நினைக்கிறேன்...''

''எந்நேரமும் இரைச்சல் அதிகமாக இருப்பதா
பொதுவாக ஜெனரேட்டர் அறைகளை இப்படி ஒதுக்கு
புறமாகத்தான் வைப்பார்கள்...''

''அப்படியானால் உங்கள் ஆட்களைத் தவிர இந்த
பக்கம் வேறு நபர்கள் யாரும் நடமாட மாட்டார்கள்.
அப்படித்தானே...?''

''ஆமாம் ஸார்...''

''உங்கள் செக்ஷனுக்குப் பின்னால் கொலை நடந்திரு
கும் விஷயம் உங்களுக்குத் தெரியும் என்று நினை
கிறேன்...''

''தெரியும் ஸார்...''

''சத்தம் எதுவும் கேட்கவில்லையா...?''

''இந்த ஜெனரேட்டர்களின் சத்தத்தில் ஏதாவது
கேட்குமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள் ஸார்...''

''சி.ஈ.ராகேஷ் கொலை செய்யப்பட்டு அரை மணி
நேரம் கூட ஆகவில்லை... இந்த ஒரு மணி நேரத்திற்குள்
இந்தப் பக்கம் யாராவது நடமாடியதைப் பார்த்தீர்களா...?''

சூபர்வைஸர் யோசித்துக் கொண்டிருக்க-

ஓம்பிரகாஷ் தொடர்ந்தார்.

''ஐ மீன்... இந்த செக்ஷனுக்கு சம்பந்தமில்லாத
ஆட்கள்...''

யோசித்து முடித்து உதட்டைப் பிதுக்கினார் சூபர்
வைஸர்.



''எனக்குத் தெரிந்து யாரும் வரவில்லை... நான் கேபினுக்குள் இருந்தால் கவனித்திருக்க வாய்ப்பில்லை... நீங்கள் மெக்கானிக்குகளிடம் பேசிப் பாருங்கள் இன்ஸ்பெக்டர்...''

சொல்லிக் கொண்டே - காயில் வைண்டிங் மெஷினுக்கருகே நின்றிருந்த காக்கி உடுப்பு ஆட்களைக் கூப்பிட்டார் சூபர்வைஸர்.

விஷயத்தைச் சொன்னார்.

அந்த மெக்கானிக்குகளில் ஒருவன் ஞாபகமாய்த் தலையசைத்தான்.

''முக்கால் மணி நேரத்திற்கு முன்னால் அல்லாய் ப்ளாண்ட்டைச் சேர்ந்த கண்பத் இந்தப் பக்கம் வந்தான்...''

''எதற்காக வந்தான்...?''

''சில சமயம் சிகரட் பிடிக்கறதுக்காக இந்த ஒதுக்குப் புறத்துக்கு அவன் வருவான்... அஞ்சு நிமிஷம் நின்னு சிகரட் பிடிச்சிட்டு போயிடுவான்... அதனாலதான் நான் அவன்கிட்டே எதுவும் கேக்கலை... தவிர எனக்கு நிறைய வேலை இருந்ததால உள்ளே போய் நான் என்னோட வேலையைப் பார்க்க ஆரம்பிச்சிட்டேன்...''

''அந்தக் கண்பத் அல்லாய் ப்ளாண்ட் செக்ஷனைச் சேர்ந்தவனா...?''

''ஆமாம்... ராக்கெட்டுக்குத் தேவையான சின்னச் சின்ன அல்லாய் ஸ்டீல் பாகங்கள் தயாரிக்கிற ப்ளாண்ட் இதே காம்பவுண்டுக்குள் இருக்கிறது...''

ஓம்பிரகாஷ் சூபர்வைஸரைப் பார்த்தார்.

''இண்டர்காமில் அந்த கண்பத்தைப் பிடிங்க...''

சூபர்வைஸர் இண்டர்காம் பொத்தான்களை அழுத்தினார்.

''ஹலோ... நான் ஜெனரேட்டர் ரூம் சூபர்வைஸர் பேசறேன்...''

என்று ஆரம்பித்து விவரித்தார்.

''..............''

''எஸ். கண்பத்...''

''..............''

"அப்படியா...?"

லேசான குழப்ப ரேகைகளோடு ரிசீவரை வைத்த அந்த சூபர்வைசர்.

ஓம்ப்ரகாஷை ஏறிட்டுச் சொன்னார்.

"கணபத் செக்ஷனில் இல்லையாம் சார்... டாய்லெ வரைக்கும் போய் விட்டு ஐந்து நிமிடங்களில் வருவதாக சொன்னவனை ஒரு மணி நேரமாகக் காணவில்லை..."

திகைப்புடன் ஓம்ப்ரகாஷ் அஸலாப் செக்ஷனை நோக் விரைந்தார்.

அஸலாப் செக்ஷனைத் தொட்ட போது - அதிர்ச்சி தகவல் அவருக்குக் காத்திருந்தது.

"இன்ஸ்பெக்டர்... கணபத்தும் கொலை செய்யப்பட்டு விட்டான்... அவன் பக்கத்தில் கொலை செய்யப் பய படுத்தப்பட்ட பிஸ்டலும் கிடக்கிறது..."

ஓம்ப்ரகாஷ் உறைந்து போய் நின்றார்.

## 6



முனீஷ் புன்னகையோடு கேட்டான்.

"என்ன விஜய்...? பேயறைஞ்ச மாதிரி நின்னுட்டே...? அப்படி என்ன அதிர்ச்சிகரமான விஷயத்தை நான் சொல் விட்டேன்...? டெலிகாம் டிபார்ட்மென்ட்டில் வேலை செய்யறேன்னு சொன்னேன்... அவ்வளவுதானே...?"

விஜய் சில விநாடிகள் தடுமாறி - பின் சமாளித்தான்.

"வ.. வந்து... ஒ... ஒண்ணுமில்லை..."

"சரி... அப்போ நாம எங்காவது உக்காந்து பேசலாமே...? டின்னர் ஸ்பாட் ரெஸ்ட்டாரெண்ட்டுக்குள்ளே போகலாமா...?"

"இப்பதான் நான் அந்த ரெஸ்டாரெண்ட்டை விட்டு வெளியே வந்தேன்..."

முனீஷ் கண்களைச் சிமிட்டிக் கொண்டு தலையை ஆட்டினான்.



"தெரியும்... அப்போ ஒண்ணு செய்வோம்... இங்கிருந்து நீ தங்கி இருக்கும் வீடு பக்கம்தானே...? உன் வீட்டுக்குப் போய் யாரோட தொந்தரவும் இல்லாம நிதானமா உக்காந்து பேசலாம்..."

சொன்னவனைத் திகைப்போடு ஏறிட்டான் விஜய்.

"எ... என் வீடு... உங்களுக்குத் தெரியுமா...?"

"வீடு மட்டுமல்லை... உன்னோட ஜாதகமே எனக்குத் தெரியும்.. இப்படி ரோட்டிலேயே நிக்க வெச்சு எல்லா விபரங்களையும் கேட்டு முடிச்சிடலாம்னு நினைக்கறியா...?"

"முன் பின் தெரியாத உங்களை எந்த நம்பிக்கையில் நான் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறது...?"

"உன்னைப் பத்தி இவ்வளவு தகவல்கள் சொன்ன பிறகும்... என்கூட பேசணும்ம்னு உனக்கு ஆர்வம் ஏற்படலையா...?"

"ஆர்வம் இருக்கு... ஆனா ஏனோ கொஞ்சம் தயக்கமா இருக்கு..."

"உனக்குள்ளே இருக்கறது தயக்கம் இல்லை... கலக்கம்... உன்னோட கலக்கத்துக்கான காரணம் எனக்குப் புரியுது... நீ என்னை நூறு பர்சண்ட் நம்பலாம்... நான் உனக்கு செய்யறதுக்காக வந்திருப்பவன்... உனக்காக சந்தோஷமான ஒரு செய்தி கொண்டு வந்திருக்கேன்..."

"என்ன செய்தி...?"

"பார்த்தியா... இன்னும் என்னை இங்கே நிக்க வெச்சுத்தானே நீ கேள்வி கேட்டுட்டிருக்கே...?"

விஜய்க்கு முனீஷின் மேல் லேசாய் நம்பிக்கை பிறந்தது. அடி மனசில் கூடவே கொஞ்சம் பயமும் ஒட்டிக் கொண்டிருந்தது.

தயக்கத்தோடே அவனை வீட்டுக்கு அழைத்துப் போனான்.

இரண்டொரு தெருக்கள் தள்ளி இருந்தது வீடு. காம்பவுண்டுக்குள் ஹாலோ-ப்ளாக்கை வைத்து ஒரு குருவிக் கூட்டைப் போல கட்டப்பட்டிருந்த வீடு.

உள்ளே பெட்டி பெட்டியாய் இருந்த மூன்று அறைகளுக்குள்ளேயும் துணிமணிகளுக்கு இணையாய் எலக்ட்ரானிக் உறுப்புகள் இறைந்து கிடந்தன. கெப்பாசிட்டர்கள்...

ஐ சிக்கள்... பிரிண்டட் சர்க்யூட் போர்டுகள்... டிரான்சிஸ்டர்கள்... துண்டு வயர்கள்...

விஜய் எடுத்துப் போட்ட பிளாஸ்டிக் சேரில் உட்கார்ந்தான் அந்த முனீஷ்.

விஜய் இன்னமும் அவனை சந்தேகப் பார்வையில் நனைத்துக் கொண்டிருக்கவே... சட்டின் உள் பாக்கெட்டில் கையை நுழைத்து அந்த நீள சதுர அட்டையை அவன் முன்னே நீட்டினான்.

"உனக்கு இன்னமும் என்மேல் நம்பிக்கை வரலை போலிருக்கு... இந்த அடையாள அட்டையைப் பார்த்தா உனக்கு என் மேல் நம்பிக்கை வரும்னு நினைக்கறேன்..."

அந்த ஐடி கார்டைப் பார்வையில் போட்டதும் விஜயின் மனசுக்குள் உதறல்கள் அதிகரித்தன.

**H. MUNEESH**

**VIGILANCE OFFICER**

என்று தடிமனான எழுத்துக்கள் தெரிந்தன. ...கள் போட்டாவின் மேல் டிபார்ட்மெண்ட் ஸ்டாம்ப்...ன் பதிவாகியிருந்தன.

"நீ... நீங்க... விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட்டா...?"

"ஆமா... டெலிபோன் லைனையோ... இன்ஸ்ட்ருமெண்ட்டையோ தவறா பயன்படுத்தறவங்களைக் கண்டுபிடிச்சு அவங்களுக்கு தண்டனை வாங்கித் தர்ற டிபார்ட்மெண்ட்டில் இருக்கேன்..."

விஜய் அடிபட்டவனைப் போல அமைதியாய் உட்கார்ந்திருக்க அந்த முனீஷ் இன்னும் அகலமாய்ச் சிரித்தான்.

"காதலியோட வீட்டு டெலிபோன் லைனில் ரிசீவரை எடுத்தா... அனு ஐ லவ் யூ...ன்னு வாய்ஸ் வர்ற மாதிரி செஞ்சியே... அந்த சில்மிஷத்தை டிரேஸ் பண்ணி கண்டுபிடிச்சப்புறம்தான் உன்னைப் பத்தி விசாரிச்சு தெரிஞ்சிகிட்டு இங்கே வந்திருக்கேன்..."

விஜய் அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தான்.

"அ... அதை டிரேஸ் பண்ணிட்டீங்களா...?"

முனீஷின் புன்னகை தொடர்ந்தது.

"உன்னோட வேல் ஸ்கேட்டர் சர்க்யூட்டை மீறி நான் எப்படி அந்த இன்டரப்ஷனை கண்டுபிடிச்சேன்னு உனக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கா...?"



மவுனமாய்த் தலையசைத்தான் விஜய்.

"என்னால் உன்னோட சில்மிஷத்தைக் கண்டுபிடிச்சு ட்ரேஸ் பண்ணியிருக்கவே முடியாது... ஆனா உன்னோட சின்ன கவனக்குறைவுதான் எனக்கு சாதகமா இருந்தது... அதைக் கவனக் குறைவுன்னு கூட சொல்ல முடியாது... அமெச்சூர்த்தனம்ன்னு வேணா சொல்லலாம்..."

"புரியும்படியா சொல்லுங்க..."

"உன்னோட வேல் ஸ்கேட்டர் டிவைஸ் எத்தனை வோல்ட்ல இயங்குது...?"

"த்ரீ வோல்ட் டி.சி. கரண்ட்..."

"சர்க்யூட்டுக்கு பவர் சப்ளை எப்படிப் போகுது...?"

"ரெண்டு 1.5 வோல்ட் டிரை பேட்டரிகள் மூலமா..."

"ஒரு பத்தம்பது பேட்டரி வாங்கிப் போடற அளவுக்கு உன் கையில் காசு இல்லையா விஜய்...? அந்த சர்க்யூட்ல நீ போட்டிருக்கும் பழைய பேட்டரிகளை எடுத்து மல்ட்டி மீட்டரை வெச்சு செக் பண்ணிப் பாரு... பேட்டரி லைஃப் முடிஞ்சிருக்கும்... வோல்ட்டேஜ் பத்தாதனால் வேல் ஸ்கேட்டர் வேலை செய்யலை... அதனாலதான் என்னை உன்னால் டிரேஸ் பண்ண முடிஞ்சுது..."

விஜய் தலை குனிந்தான்.

"எந்த விதமான கெட்ட நோக்கத்துடனும் நான் அந்தக் காரியத்தைச் செய்யலை... நானும் அனுவும் பரஸ்பரம் விரும்பறோம்... ஒரு விளையாட்டுக்காக இதைச் செஞ்சேன்... இனிமே இப்படி செய்ய மாட்டேன்... இதைப் பெரிசு படுத்த வேண்டாம் ஸார்... ப்ளீஸ்... என்னை மன்னிச்சு விட்டுடுங்க... போலீஸ் கேஸ்ன்னு ஆயிடுச்சுன்னா அப்புறம்... அனுவை நான் கை பிடிக்கறது கனவாலே போயிடும்... ஏற்கனவே நான் ஒரு நல்ல வேலையில் இல்லாததனாலே அனுவை இழந்துடுவேனோங்கற பயத்தில் இருக்கேன்..."

முனீஷ் விஜய்யைக் கையமர்த்திக் கொண்டே சொன்னான்.

"வெளிநாட்டில் நடந்த ஒரு உண்மைக் கதை உனக்குத் தெரியுமா...?"

"எ... என்ன ஸார்...?"

''அங்கே பேங்க் உட்பட எல்லாமே கம்ப்யூட்டர் மயம்... இண்டர்நெட் மயம்... ஒரு பத்து வயசுப் பைய பாங்க் செக்யூரிட்டி பாஸ்வேர்டை உடைச்ச கஸ்டமர்களோட அக்கவுண்ட்ஸ் விவகாரங்களில் எல்லாம் புகுந்து விளையாடிட்டான்... விளையாட்டா அந்தக் காரியத்தை அவன் பண்ணிட்டான்... அவனை போலீசில் பிடிச்சு கொடுப்பதுதான் முறை... ஆனா பாங்க்காரங்க அதைச் செய்யலை... மாறா... அந்தப் பொடியனை பாங்கில் வேலைக்கு எடுத்துகிட்டு... ஒரு தனி கேபின் கொடுத்து அந்தஸ்தா அவனை வெச்சிருக்காங்க...''

''ஏன் அப்படி...?''

''செக்யூரிட்டி பாஸ்வேர்டை உடைச்சிட்டு நீ உள்ளே வந்த மாதிரி இன்னொருத்தன் உள்ளே வரக் கூடாது... அதுக்குத் தகுந்த மாதிரி ஸ்ட்ராங்கான ஒரு பாஸ்வேர்டு ப்ரொட்டெக்ஷன் சிஸ்டத்தை உருவாக்கும் பொறுப்பை அந்தப் பொடியன் கிட்டே கொடுத்து லட்சக் கணக்கில் அவனுக்கு சம்பளமும் தந்திருக்காங்க... திருடன் கையிலேயே சாவியைக் கொடுத்து காவலுக்கு இருக்க வைக்கறதுங்கறது இதுதான்... இது வெள்ளைக்காரன் ஸ்டைல்... இதே ஸ்டைலைத்தான் இப்போ நான் உன் விஷயத்திலும் ஃபாலோ பண்ணலாம்னு இருக்கேன்...''

ஜய்யின் திகைப்பு பல மடங்கு எகிறியது.

லை... ஸார்... நீங்க என்ன சொல்றீங்க...?''

ஸ்... உனக்கு டெலிகாம்ல வேலை தரப் போறோம்... என்னை மாதிரி விஜிலென்ஸ் விங்கில நீ வேலை செய்யப் போறே... உன்னோட முதல் ப்ராஜெக்ட் பரம ரகசியமானது... அதனால நீ வேலையில் இருக்கேன்னு அந்த ப்ராஜெக்ட் முடியற வரைக்கும் யாருக்கும் தெரியக் கூடாது...''

''அனுவுக்கும் அவங்க வீட்டுக்கும் கூடவா...?''

''அவங்களுக்கு தெரியறதைப் பத்தி எனக்கு ஆட்சேபணை இல்லை... ஆனா பப்ளிக்ல தெரியவேண்டாம்... ஏன்னா அரசாங்கத்தில் ரகசியமான பணியை நீ நிறைவேற்றப் போறே... அட்லீஸ்ட் அந்த ப்ராஜெக்ட் முடியற வரைக்குமாவது நீயும் உன்னைச் சேர்ந்தவங்களும் ரகசியத்தைக் காப்பாத்தணும்னு நினைக்கறேன்...''



''என்ன ப்ராஜெக்ட் அது...?''

''சொல்றேன்... இந்த மாதிரி புறாக் கூண்டுக்குள் இருந்து நீ கஷ்டப்பட வேண்டியதில்லை... எல்லா வசதிகளோடவும் ஒரு பெரிய லேப் உனக்குத் தரப்படும்... அந்த லேபில் மூணு செக்ஷன்கள் இருக்கும்... ஒரு செக்ஷனில் நிலாவில் என்ன சூழ்நிலை இருக்குமோ... அது அமைக்கப்பட்டு இருக்கும்... இன்னொரு செக்ஷனில் பூமியைச் சுற்றி வரும் ஒரு சேட்டிலைட் என்விரான்மெண்ட் இருக்கும்... மூணாவதா உள்ள செக்ஷன் நம்ம பூமி... நிலா செக்ஷனிலிருந்து சேட்டிலைட் மூலமா பூமி செக்ஷன் மெஸேஜ் பெறணும்... அதே மாதிரி பூமி செக்ஷனிலிருந்து சேட்டிலைட் மூலமா நிலா செக்ஷன் மெஸேஜ் பெறணும்... இதுக்கான ரிசீவர்கள்... ட்ரான்ஸ்மிட்டர்கள் எல்லாமே ஏற்கனவே இருக்கு... நீ செய்ய வேண்டியதெல்லாம்... உன்னோட லேஸர் டிடெக்டர் தியரியைக் கொஞ்சம் பெரிய அளவில் இதில் உபயோகப்படுத்தணும்... நம்மைத் தவிர வேற யாரும்... மெஸேஜை ரிசீவ் பண்ணக் கூடாது... நாம அனுப்பும் இடம்... வாங்கும் இடம்... எதையுமே யாரும் டிரேஸ் பண்ணக் கூடாது... இதுதான் உனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ப்ராஜெக்ட்... மாசம் முப்பதாயிரம் சம்பளம்... நீ சரின்னு தலையாட்டினா முதல் மாச சம்பளத்தை அட்வான்ஸாகவே உன் கையில் தர ரெடியா இருக்கேன்... காரணம் விஷயம் அவ்வளவு அர்ஜெண்ட்...''

விஜய்க்குள் மகிழ்ச்சி வெள்ளம் அலை மோதிக் கொண்டிருக்க...

பலமாய்த் தலையாட்டினான்.

''இப்படி ஒரு வாய்ப்பை நான் ஏன் மறுக்கணும்...? இந்த ப்ராஜெக்ட்டை எடுத்துக்க நான் தயாரா இருக்கேன் ஸார்...?''

விஜய் சொன்ன மறுகணம் தன் ஜெர்கின் ஜாக்கெட்டுக்குள் கையை நுழைத்து அந்த நூறு ரூபாய் கட்டுக்களை எடுத்து முன்னால் வைத்தான் முனீஷ்.

முனீஷின் உதட்டோரம் படர்ந்திருந்த விஷச் சிரிப்பை விஜய் கவனிக்கவில்லை.

# 7



**த**லையில் பெயருக்கு கொஞ்ச முடி வைத்திருந்த விண் [illegible] வெளி ஆராய்ச்சி மையத்தின் டைரக்டர் அகர்வா [illegible] உச்சபட்ச கவலையேற்று எதிரே உட்கார்ந்திருந்த இன் [illegible] பெக்டர் ஓம்ப்ரகாஷைப் பார்த்தார்.

''ஒரு மிகப் பெரிய சாதனைக்கான அச்சாரம் போட் [illegible] விட்ட மகிழ்ச்சியைக் கொண்டாடக் கூட இயலாம [illegible] அடுத்தடுத்து இந்த கேம்பஸுக்குள்ளேயே மின்ன [illegible] வேகத்தில் இரண்டு கொலைகள் நடந்துவிட்டன...''

''இது வருத்தத்துக்குரிய விஷயம்தான் மிஸ் [illegible] ரக்டர். கொலையாகிக் கிடந்த கண்பத்தின் அரு [illegible] பிஸ்டலும் இன்னொரு மிரட்டல் கடிதமும் கிடந்தது...''

சொல்லிக் கொண்டே ஓம்ப்ரகாஷ் கம்ப்யூட் [illegible] அச்சுக்கள் ஓடியிருந்த தாளை அகர்வாலிடம் நீட்ட - அவ [illegible] அதை வாங்கிக் கொள்ளக்கூட சக்தியற்ற முகத்தோடு [illegible] சொன்னார்.

''நான் அதைப் படிக்கக் கூடிய மனோ நிலையில் [illegible] இல்லை... ஒரே டென்ஷனாக இருக்கிறது... அந்த [illegible] கடிதத்தின் சாராம்சத்தை நீங்களே சொல்லிவிடுங்கள்...''

''இந்த விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் செக்யூரிட் [illegible] சிஸ்டம் பற்றி கொலையாளிகளுக்கு மிக நன்றாய்த் [illegible] தெரிந்திருக்கிறது... என்பது இந்த லெட்டரிலிருந்து [illegible] நிரூபணமாய்த் தெரிகிறது...''

''என்ன சொல்லியிருக்கிறான்...?''

''மிஸ்டர் ராகேஷ் கொலையான உடனே இந்த கேம்பஸுக் [illegible] குள் எப்படி பிஸ்டல் வந்தது என்று சிண்டைப் பிய்த்துக் [illegible] கொள்ள ஆரம்பித்திருப்பீர்கள்... உங்கள் டிடெக்டருக் [illegible] கும்... அலர்ட் டிஸ்ப்ளே மானிட்டருக்கும் டிமிக்கி தரும் [illegible] வண்ணம் ஒரு வகை பிளாஸ்டிக் ஜெல் உறைக்குள் வைத்து [illegible] பிஸ்டலை காம்பஸுக்குள் கொண்டு வந்தோம்... [illegible] ராகேஷின் பக்கத்திலேயே பிஸ்டலைப் போட்டு விட்டுப் [illegible] போகத்தான் எண்ணியிருந்தோம்... சிகரட் பிடிப்பதற்காக [illegible]



ஒதுங்கியிருந்த கண்பத் கொலையைப் பார்த்து விட்டதால் கொலை லிஸ்ட்டில் அவனும் சேர்ந்துவிட்டான்... கனம் போலீஸார் அவர்களே... நீங்கள் பாவம்... சிண்டைப் பிய்த்துக் கொள்ள வேண்டாம் என்பதாலேயே விஷயங்களை விலாவாரியாய்ச் சொல்லிவிட்டோம்... இனி எங்கள் கவனம் எல்லாம் மேலேதான்... மேலே போனவர்கள் நிரந்தரமாய் மேலே செல்வதற்கு எங்களாலான ஏற்பாடுகள் செய்யப்படும்... இப்படிக்கு இளைஞர் படை என்று போட்டிருக்கிறது...''

''வந்தோம்... போனோம்... என்று எழுதியிருப்பதை வைத்துப் பார்த்தால் ஒரு பெரிய க்ரூப் இதில் இன்வால்வ் ஆகி இருக்கிறது என்று தோன்றுகிறது...''

அகர்வால் சொல்ல - ஆமோதித்தார் ஓம்ப்ரகாஷ்.

''யுவார் எக்சாட்லி கரெக்ட்... உடனடியாய் கம்ப்யூட்டரில் ஒரு லெட்டர் பிரிண்ட் செய்து வைக்கிறார்கள் என்றால் உள்ளுக்குள்ளேயே நெட் வொர்க் இருக்க வேண்டும்...''

''இன்றைக்கெல்லாம் அது ஒரு பெரிய விஷயமே இல்லை இன்ஸ்பெக்டர்... உள்ளங்கை அளவுக்கு லாப்டாப் கம்ப்யூட்டர்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டன...''

''இனி எங்கள் கவனம் எல்லாம் மேலேதான் என்று எழுதியிருக்கிறார்களே... மேலே சென்ற விண்கலத்துடன் தொடர்பு தொடர்ந்து இருந்து வருகிறதா...?''

''ஒவ்வொரு நிமிஷமும் கண்ட்ரோல் அறையோடு அஜய் சர்மா, மாலிக் மற்றும் வைத்யா தொடர்பு கொண்டபடிதான் உள்ளார்கள்... இந்த நிமிஷம் வரைக்கும் பயப்படும்படியான எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை...''

''நீங்கள் பல கோடிகளை செலவழித்து ஒரு விண்வெளி ப்ராஜெக்ட்டை செயல்படுத்துகிறீர்கள்... மேலே செல்லும் விண்வெளி வீரர்கள் பல நாட்கள் பயிற்சி எடுத்துக் கொண்டு செல்கிறார்கள்... இதில் இவ்வளவு சிரமங்கள் இருக்க - ரகசியமாய் அந்த விண்கலத்தை அணுகி எதிரிகள் நாசம் ஏற்படுத்துவது சாத்தியமா...?''

டைரக்டர் அகர்வால் ஒரு வறட்டுப் புன்னகையைத் தந்தார்.

''நக்சலைட்டுகளைப் பற்றி நாம் எப்போதும் குறைத்து மதிப்பிடுகிறோம் இன்ஸ்பெக்டர்... உலகெங்கும் நக்சலைட்டுகள் தனி அரசாங்கமே நடத்துகிறார்கள்... அவர்களுக்கென்று தனிப்பட்ட பரந்து விரிந்த நெட்வொர்க் உள்ளது... அவர்களிடம் இல்லாத டெக்னாலஜி இல்லை. ஆகவே நாம் எதற்கும் தயாராகவே இருக்க வேண்டும்...''

''அப்படியானால் இப்போது விண்வெளியில் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க என்னென்ன மாற்று ஏற்பாடுகள் வைத்திருக்கிறீர்கள்...?''

''எதிரியின் ஸ்ட்ராட்டஜி நமக்குத் தெரியாது. ஆகவே... ஏற்படும் அசாம்பாவிதத்தைப் பொறுத்துத்தான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி நாம் தீர்மானிக்க முடியும்... ஆனால் பாதுகாப்பு கருதி லேசர் பிஸ்டல் உட்பட பல்வேறு ஆயுதங்கள் விண்கலத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன... நம் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் துரதிர்ஷ்ட சம்பவம் ஏற்படுமானால் நடவடிக்கையைப் பின்னர்தான் முடிவு பண்ண வேண்டும்...''

''இப்போது நான் கன்ட்ரோல் அறையைப் பார்க்க வேண்டும்... விண்வெளியில் பறப்பவர்களிடம் பேச விரும்புகிறேன்...''

அகர்வால் தலையசைத்தபடி எழுந்தார்.

''வாருங்கள் போகலாம்...''

அந்த அறையின் தள்ளு கதவைத் திறந்து - வெளியே வந்து வராந்தா டைல்ஸ்களை காலடியில் நழுவ விட்டார்கள்.

கண்ணாடி வேய்ந்த பாதுகாப்புப் பகுதிக்குள் நுழைய -

ஏராளமாய் மேஜைகளும் - அதில் கலர் முகங்களோடு கம்ப்யூட்டர்களும் அணி வகுத்து இருந்தன. இள நீல சர்ட்டும் பட்டை வரிகள் ஓடும் கழுத்து டையும் அணிந்த அலுவலர்கள் ஏராளமாய் குறுக்கும் மறுக்கும் உலவிக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பிரதான அதிகாரியை நெருங்கின போது - அவர் சற்றே பரபரப்பான முகத்தோடு தெரிந்தார்.

அகர்வாலைப் பார்த்ததும் அனிச்சையாய் எழுந்து நின்று விஷ் செய்ய - அகர்வால் கையமர்த்தினார்.



''ப்ரோசீட்...''

அந்த அதிகாரி ஹெட்போனை மாட்டிக் கொண்டு கம்ப்யூட்டருடன் போராடிக் கொண்டிருந்தார்.

அகர்வால் அவரிடம் கேட்டார்.

''அவர்களோடு லிங்க் கிடைக்கிறதா...? எல்லாம் சரியாக உள்ளதா...?''

அதிகாரி மெல்லிய பதட்டத்தோடு மறுத்தலாய்த் தலையாட்டினார்.

''ஐந்து நிமிஷம் முன்பு வரை எந்தப் பிரச்சினையும் இல்லை... கடந்த ஐந்து நிமிஷங்களாய்த் தொடர்பு கிடைக்கவில்லை... அதனால்தான் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள நான் போராடிக் கொண்டிருக்கிறேன்...''

அகர்வால் கவலையோடு அந்த டெர்மினலுக்குப் பக்கத்திலேயே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார்.

'LINK FAILURE

RETRY? or ABORT?

மானிட்டர் தொடர்ந்து இதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தது.

அதிகாரி ரீட்ரை கொடுத்துக் கொண்டே இருந்தார்.

ஏறக்குறைய பத்து நிமிஷ முயற்சிக்குப் பின் அந்த எரர் மெஸேஜ் நின்று போனது.

தொடர்ந்து மெல்லிய இரைச்சலுக்கிடையே ஹெட்போனில் வைத்யாவின் குரல் கேட்டது.

''ஹலோ... கன்ட்ரோல் ரூம்...?''

''எஸ்...''

''கண்ட்ரோல் ரூம்...?''

''எஸ்... கன்ட்ரோல் ரூம்தான் பேசுங்கள் மிஸ்டர் வைத்யா...''

அதிகாரி அகர்வாலிடம் திரும்பி - லிங்க் கிடைத்து விட்டது என்பதற்கு அடையாளமாய் சந்தோஷப் புன்னகை பூத்தார்.

அவர் புன்னகை அதிக நேரம் நீடிக்கவில்லை.

''வீ ஆர் இன் ட்ரபுள்...'' என்றார் வைத்யா.

"என்ன பிரச்சினை...?"

"கம்யூனிகேஷனில் ஏதோ, இன்டர்ப்ஷன் ஏற்படுகிறது..."

"சரி பண்ணி விடலாம்... எர் எங்கிருந்து வருகிறது என்று ட்ரேஸ் பண்ண இந்த நிமிஷமே ஒரு டீம் அலர்ட் செய்துவிடுகிறேன். இதைப் பற்றி நீங்கள் பெரிதாகக் கவலைப்பட வேண்டாம்..."

"பிரச்சனை அது மட்டும் இல்லை... சி ராகேஷை [illegible]கக் கேட்டீர்கள்..?"

"இங்கே ஒரு டாபைன் இயந்திரத்தில் கோளாறு [illegible]டிருக்கிறது..."

"மைக்ரோட்வஸ்... இயந்திரத்தில் கோளாறா..? அவ்வளவு தரோவான பரிசோதனைக்குப் பின்னரும் எந்திரக் கோளாறா..? வாய்ப்பே இல்லையே..?"

"வாய்ப்பில்லை என்றுதான் நம்பியிருந்தோம்... ஆனால் இப்போது கோளாறு ஏற்பட்டுவிட்டதே... அதை உடனே சரி செய்தாக வேண்டும்... இல்லையென்றால் நாங்கள் நிலவில் கால் பதிப்பதென்பது நடக்கிற காரியம் இல்லை... அந்தக் கோளாறு சம்பந்தமாக சீஃப் என்ஜினியர் ராகேஷிடம் ஆலோசனை பெற வேண்டும்..."

வைத்யா பேசிக் கொண்டிருக்கும்போதே...

சட்டென்று ஏதோ கரகர ஓசை காதைக் கிழிக்க ஆரம்பித்தது.

அதைத் தொடர்ந்து விங்க் பெயிலியர் ஆகி இன்ட்டரப்ஷன் வாய்ஸ் காதில் விழ ஆரம்பித்தது.

**"இளைஞர் படை வீரன் பேசுகிறேன்... எங்கள் சக்தி என்ன என்று இப்போதாவது புரிகிறதா..? நாங்கள் எச்சரித்திருந்தும் கேட்காமல் நீங்கள் ஆட்டத்தைத் துவக்கி விட்டீர்கள்... உங்கள் விண்கலத்தையும் அதனோடு இணைந்த அணுவின் நிலையத்தையும் முழுக்க முழுக்க எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் முயற்சியின் ஆரம்பம் இது... நடந்த வரை வெற்றி எங்களுக்கே..! உங்கள் ஆட்களின் ஆத்மாக்கள் சாந்தி அடைய இப்போதே பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்..."**

அகர்வால் சம்மட்டி அடி வாங்கியவரைப் போல உட்கார்ந்திருந்தார்.



## 8



பார்க்கின் முனையில் அனுவின் முகம் தெரிந்ததுமே மலர்ந்து போனான் விஜய்.

நெருங்கி வந்தவளை உற்சாகத்தோடு வரவேற்றான்.

"வா... அனு..."

"உட்காரு..."

அனு குழப்ப வரிகள் அலை மோதும் நெற்றியோடு பெஞ்சில் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"என்ன ஒரே உற்சாகமா இருக்கீங்க..?"

"நான் எப்ப உற்சாகமா இல்லை..?"

"அது வேற விஷயம்... தலையில இடியே விழுந்தாலும் நீங்க சிரிச்சுகிட்டே தலையை சொறிஞ்சி விட்டுக்கற ரகம்... இருந்தாலும் இன்னிக்கு உற்சாகம் கொஞ்சம் மீட்டருக்கு மேல ஓடிட்டிருக்கு..."

சிரித்தான் விஜய்.

"காரணமாத்தான்..."

"அந்தக் காரணத்துக்கும்... காவேரிக்கு தகவல் கொடுத்து என்னை அவசரமா வரச் சொன்னதுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா...?"

"நிச்சயமா இருக்கு..."

"சொல்லுங்களேன்... என்ன விஷயம்..? அடியேன் தெரிஞ்சுக்கலாமா..?"

"இனிமே நாம எதுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை..."

"சஸ்பென்ஸ் வெக்காம பளிச்சுன்னு சொல்லுங்க..."

"என்னோட எதிர்பார்ப்புக்கு ஏத்த மாதிரி ஒரு வேலை எனக்குக் கிடைச்சிருக்கு அனு..."

"என்ன வேலை..? எப்போ இன்டர்வியூ அட்டெண்ட் பண்ணினீங்க..? என்கிட்டே இது வரைக்கும் சொல்லவே இல்லையே..?"

விஜய் பெருமிதம் வழியும் குரலில் சொன்னான்.

''டெலிகம்யூனிகேஷன் டிபார்ட்மெண்டில் எனக்கு வேலை...''

''இசிட்...?''

''கிட்டத்தட்ட ஆர் அண்ட் டி மாதிரியான வேலை...''

''எவ்வளவு சம்பளம்..?''

''மாசம் மூப்பதாயிரம்...''

''மூப்பதாயிரமா...?''

விழிகளை அகலமாய் விரித்தாள் அனு.

''முதல் மாச சம்பளத்தை அட்வான்சாகவே கொடுத்துட்டாங்க...''

திகைப்போடு நிமிர்ந்தாள் அவள்.

''சம்பளத்தை இப்பவே குடுத்துட்டாங்களா..? என்னை ஒரேப்லெசண்ட் ஷாக்கா கொடுத்துட்டே இருக்கீங்க..?''

''நடந்த நிஜத்தைத்தான் நான் சொல்லிட்டிருக்கேன் அனு...''

''இண்டர்வியூ எப்போ அட்டெண்ட் பண்ணினிங்க..? எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமா கார்டு வந்ததா..?''

''இண்டர்வியூவாவது மண்ணாங்கட்டியாவது... இந்த வேலைக்கு தொழில் திறமைதான் முக்கியம்... என்னோட திற்மையைத் தெரிஞ்சிகிட்டு தானாகவே வீடு தேடி வந்து இந்த வேலையைக் கொடுத்தாங்க...''

அவன் சொன்னதும் - அனுவின் முகத்தில் சந்தோஷ ரேகைகளின் சதவீதம் சற்றே குறைந்து சந்தேகத்தின் சாயல்கள் லேசாய் விழ ஆரம்பித்தன.

''என்ன சொல்றிங்க விஜய்..? வீடு தேடி வந்து இந்த வேலையை உங்களுக்குக் கொடுத்தாங்களா..? அதுவும் ஒரு கவர்மெண்ட் எண்ட்டர்ப்ரைஸ்...? நம்பற மாதிரி இல்லையே..? உங்க திறமை அவங்களுக்கு எப்படித் தெரிஞ்சதாம்..?''

''நான் உன் வீட்டு டெலிபோன் லைனை இண்டரப்ட் பண்ணி அனு ஐ லவ் யூன்னு வாய்ஸ் குடுத்தேனே... அதை டிரேஸ் பண்ணிக் கண்டுபிடிச்சிட்டார் ஒரு விஜிலன்ஸ் ஆபீசர்... நான் பண்ணினது தப்புத்தான்... ஆனா அதிலிருந்த புத்திசாலித்தனம் அவங்களுக்குப் பிடிச்சிருந்தது...''



''என்னால நம்ப முடியலையே விஜய்...''

''நீ நம்பினாலும் நம்பலைன்னாலும் இன்னிலிருந்து நான் மாசம் மூப்பதாயிரம் சம்பளம் வாங்கற செண்ட்ரல் கவர்மெண்ட் எம்ப்ளாயீ...''

''உங்க ஆபீஸ் எங்கே இருக்கு..?''

''நான் விஜிலன்ஸ் பிரிவைச் சேர்ந்தவன்... அதிலும் ஒரு ரகசியமான ஒரு கவர்மெண்ட் ப்ராஜெக்ட்டை எடுத்த எடுப்பிலேயே என் கையில் தரப்போறாங்க... அதனால வேலையில் உள்ள விஷயத்தை ரகசியமாத்தான் வெச்சிக்கணும்... ஆபீஸ் கிடையாது... லேப்தான்... லேப் எங்கிருக்குன்னு இன்னும் எனக்குத் தெரியாது...''

அனு இன்னமும் நம்பாத பார்வையில் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டுப் புன்னகைத்தான்.

''உனக்கு என் மேல நம்பிக்கை வரலையா...? நான் பொய் சொல்றேன்னு நினைக்கிறியா..?''

''நீங்க சொல்றதை நான் நம்பறேன்... ஆனா நடந்த விஷயங்கள் என்னோட மனசுக்கு உறுத்தலாவே இருக்கு... அப்பாயின்மெண்ட் ஆர்டர் தந்திருக்காங்களா..?''

''தரலை... இனிமேல் தருவாங்க''

''என்ன விஜய்... அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கூட இன்னும் தரலை... அதுக்குள்ளே சம்பளம் குடுத்துட்டாங்களா..? என்னவோ குளறுபடி இருக்கு...''

''குளறுபடி இருந்தா இருக்கட்டும்... நமக்குத் தேவை பணம்தானே..? எப்படியோ அது நமக்குக் கிடைக்குது... அதை நினைச்சு சந்தோஷப்பட வேண்டியதுதான்...''

''அப்படி இல்லை... தூண்டில் புழுவுக்கு ஆசைப்பட்டு நாம நிரந்தரமா ஒரு சதி வலையில சிக்கிக்கக் கூடாது...''

''நீ ஓவரா யோசிக்கிறே... அந்த முனீஷ் என்கிட்டே அவரோட ஐ டி கார்டைக் காட்டினார்... கார்டை நான் வாங்கிப் பார்த்தேன். சீல் எல்லாம் இருந்தது... ஒரிஜினல் தான்... சந்தேகமே இல்லை...''

''விஜிலன்ஸ் ஆபீசர்ஸ் எந்த ஆபிசில் இருப்பாங்கன்னு எனக்குத் தெரியும்... அப்பாவோட ப்ரெண்ட் ஒருத்தர் நாலஞ்சு வருஷத்துக்கு முன்னால வொர்க் பண்ணிட்டிருந்

தார்... இப்போ தாக்கூர் டிரான்ஸ்பர் ஆகிப் போயிட்டார். அந்த ஆபிசுக்குப் போய்... முனீஷ் நிஜமாகவே அங்கு இருக்காரான்னு விசாரிச்சுப் பார்க்கலாம்...''

''தாராளமா...''

''அப்போ கிளம்புங்க...''

சிமெண்ட் பெஞ்சை விட்டு எழுந்தார்கள்.

சமன்படுத்தப்பட்ட மண்பாதையில் இருபுறமும் படர்ந்து கிடந்த புல்தரையில் ஆங்காங்கே சிலர் மல்லாந்து கிடந்தார்கள். ஒரு சுண்டல் விற்கும் பையன் கவெக்ஷன் சில்லரைகளை ஓரமாய் உட்கார்ந்து எண்ணிக் கொண்டிருந்தான்.

பார்க்கின் அகலமான வாயிலைக் கடந்து வெளியே வந்தார்கள்.

இடது புறம் நடக்க ஆரம்பித்தவளின் கையைப் பிடித்துத் தடுத்தான் விஜய்.

''எங்கே போறே...?''

''பஸ் ஸ்டாப்புக்குத்தான்...''

''பஸ் ஸ்டாப்பெல்லாம் வேண்டாம்... ஆட்டோ பிடிச்சிக்கலாம்...''

''ஆட்டோவா...? இங்கிருந்து முப்பது ரூபாய் கேப்பான்...''

சிரித்தான் விஜய்.

''அய்யா இந்த நிமிஷம் முப்பதாயிரம் ரூபாய்க்கு அதிபதி. வெறும் முப்பது ரூபா பணத்துக்காக யோசிக்கிற பிசினெஸ்ஸெல்லாம் இனிமே கிடையாது...''

''முனீஷ் அங்கே வொர்க் பண்ணலைன்னு தெரிஞ்சா பணத்தை அப்படியே திருப்பிக் கொடுத்துட்டு ஒதுங்கிக்கிறதுதான் நல்லது... இப்பவே நீங்க தாம்தூம்னு செலவு பண்ண வேண்டாம் விஜய்...''

அவன் அலட்சியமாய் சிரித்தான்.

''நான் பாசிட்டிவ்வா திங்க் பண்றேன்... தவிர முனீஷ் அங்கே வேலை செய்யறதுக்கான ஆதாரத்தையும் கண்ணில் பார்த்தவன் நான்... எனக்கு இந்த விவகாரத்தில் எந்த சந்தேகமும் இல்லை... உனக்குத்தான் சந்தேகம் ஏற்பட்



டிருக்கு... அதை இப்போ நாம தெளிவு படுத்திக்கப் போறோம்... நீ அநாவசியமா பயப்பட வேண்டாம்...''

சொல்லிக் கொண்டே வலதுபுறம் இருந்த ஒரு ஆட்டோ ஸ்டாண்டுக்கு அவளைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டான்.

அனு அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தாள்.

''எங்கே ஸார் போகணும்...''

டிரைவர் கேட்க - விஜய் திரும்பி அனுவிடம் கேட்டான்.

''அனு... எங்கே போகணும்...?''

''எஸ். ஆர். எஸ். ரோடு...'' என்றாள் அவள்.

டிரைவர் ஸ்டார்ட்டரைக் கையினால் இழுத்துவிட்டான்.

ஆட்டோவின் சின்ன என்ஜின் தட தடவென உறுமியது.

மூன்று சக்கரங்களும் ஆவலோடு சாலையை விழுங்க ஆரம்பித்தன.

மீட்டரில் எண்கள் சட்சட்டென மாறிக் கொண்டே இருந்தன.

குலுங்கலாய்ப் பயணம்.

அந்த சாலையைத் தொட பதினைந்து நிமிஷங்கள் பிடித்தன.

''எஸ். ஆர். எஸ். ரோடு வந்துடுச்சம்மா... இங்கே எங்கே போகணும்...?''

''டெலிகாம் டிபார்ட்மெண்ட் போர்டு வெச்சிருக்கும் பாருங்க... இன்னும் கொஞ்சம் தூரம் உள்ளே போகணும்...''

சொற்ப தூரம் குலுங்கிய ஆட்டோ அந்த காம்பவுண்டின் முன்னே நின்றது.

ஆட்டோவினின்றும் இறங்கி உள்ளே போனார்கள்.

ரிசப்ஷன் மாதிரி இருந்த அரை வட்ட வடிவத்தில் இருந்த மர மேஜைக்குப் பின்னே தெரிந்த இளைஞனை அணுகி அனு கேட்டாள்.

''மிஸ்டர் முனீஷ் இருக்காரா...?''

''விஜிலன்ஸ் ஆபிசர் முனீஷையா கேக்கறீங்க...?''

''எஸ்...''

''அவர் இன்ஸ்பெக்ஷனுக்காக வெளியே போயிருக்கார்... வர்றதுக்கு ஒரு மணிக்கு மேலாகும்...

''தேங்க்யூ...''

''உங்க பேர் என்ன மேடம்..? அவர் வந்தா இன்பார்ம் பண்ணணும்...''

''ஒன் ஹவர் கழிச்சு நான் திரும்பி வந்து அவரைப் பார்த்துக்கறேன்... நீங்க எதுவும் அவர்கிட்டே சொல்ல வேண்டியதில்லை...''

அந்த இளைஞனிடம் விடை பெற்றுக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

விஜய் புன்னகையோடு அவளைப் பார்த்தான்.

''இப்பவாவது நம்பறியா..?''

''அந்த முனீஷ் இங்கே இருக்கார்ங்கறதை நம்பறேன். இங்கே அவர் இருந்ததாலதான் அந்த டெலிபோன் சிஸ்டத்தை அவரால டிரேஸ் பண்ணி கண்டுபிடிச்சு வர முடிஞ்சது... ஆனா...''


''ஆனா என்ன அனு..?''

''உங்களுக்கு வேலை தர்றதா அவர் சொன்னதை ...னால நம்படி முடியலை விஜய்.. சம்திங் ராங்ன்னு என் மனசுக்குப் படுது... வழக்கத்துக்கு மாறான செயல்கள் நம்மைச் சுத்தி நடந்தா நாமதான் அலர்ட் ஆகிக்கணும்...''

''ஹலோ... கிழவிப் பாட்டி... உங்க அறிவுரைகளை கொஞ்சம் நிறுத்திக்கிறீங்களா..? ஆறு மாசம் பொறுத்துக்கங்க... அதுக்குள்ளே நான் லட்சாதிபதி ஆயிடுவேன்... அப்புறம் ஒரு நாள் அப்பாயின்மென்ட் வாங்கி உங்க அப்பாவை மீட் பண்ணி நம்ம கல்யாணத்தைப் பத்திப் பேசிடலாம்...''

பேசிக் கொண்டே போன விஜய்யைக் கவலையான கண்களால் பார்த்தாள் அனு.

## 9



கன்ட்ரோல் ரூம்.

ஒவ்வொரு கம்ப்யூட்டர் டெர்மினலுக்கும் முன்னால் கொத்துக் கொத்தாய் என்ஜினியர்கள் நின்று விண்கலத்துடன் லிங்க் பெற போராடிக் கொண்டிருந்தார்கள்.



இன்ஸ்பெக்டர் ஓம்பிரகாஷ் கவலையான பார்வையால் வருடியபடியே மேவாயைத் தேய்த்தார் டைரக்டர் அகர்வால்.

''விண்கலத்தில் சென்றிருக்கும் ஐந்து பேரின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் போலிருக்கிறதே... எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் திரும்பக் கிடைக்காதது மனித உயிர் ஒன்றுதான்... எதையும் யோசிக்காமல் லிங்க் கிடைத்தவுடன் அவர்களைத் திரும்ப வரவழைத்துக் கொள்வதுதான் நல்லது...''

''இத்தனை நாள் பிரயத்தனங்களும் வீணாகி விடுமே..?''

''அந்த ஹைடெக் எதிராளிகளின் சதியால் பிரயத்தனங்களும் வீணாகி உயிர்களையும் பறிகொடுப்பதைக் காட்டிலும்... உயிர்களையாவது காப்பாற்ற நாம் முயற்சி செய்யலாமே..?''

அகர்வால் யோசனையோடு பார்த்துக் கொண்டிருக்க - ஓம்பிரகாஷ் தொடர்ந்து சொன்னார்.

''கண்ணுக்குத் தெரியாமல் கண்ணாமூச்சி ஆடுபவர்களை கூண்டோடு பிடித்துவிட்டு பிறகு இந்த முயற்சிகளைத் தொடர்வதே நல்லது...''

தலையை அசைத்தார் அகர்வால்.

''நீங்கள் சொல்லுவது சரிதான்... இப்போதைக்கு உயிர்கள்தான் முக்கியம்... பாதி வழியில் லிங்க் பெயிலியர் ஆகி விட்டது... எவ்வளவு மணி நேரங்களாகி விட்டன... இன்னும் லிங்க் கிடைத்தபாடில்லை... டர்பைனில் ஏதோ கோளாறு என்று வேறு சயன்டிஸ்ட் வைத்யா சொன்னார்...''

கவலைப் பெருமூச்சுடன் அகர்வால் சொல்லிக் கொண்டிருக்கும் போது -

என்ஜினியர் வேகமாய் வந்தார்.

''ஸார்... லிங்க் கிடைத்துவிட்டது...''

அகர்வாலும்... ஓம்ப்ரகாஷும் பரபரப்பானார்கள்.

டெர்மினலுக்கு விரைந்தார்கள்.

அகர்வால் ஹெட்போனை வாங்கிப் பொருத்திக் கொண்டார்.

"ஹலோ... ஹலோ... நான் மாலிக் பேசுகிறேன்..."

"சொல்லுங்கள்... நான் அகர்வால்... டர்பைன் கோளாறு என்னவாயிற்று...? இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்...? உங்கள் ஐந்து பேருக்கும் ஆபத்து எதுவும் இல்லையே...?"

"டர்பைன் கோளாறை நாங்களே சரி செய்து விட்டோம்... விண்கலம் இப்போது நிலவில் தரை இறங்கி உள்ளது... இன்னும் சற்று நேரத்தில் வெற்றிகரமாக தானியங்கி அணுமின் நிலையத்தை இன்ஸ்டால் செய்து விடலாம்..."

"வழியில் வேறு எந்த அசம்பாவிதமும் ஏற்பட வில்லையே...?"

"இல்லை... கம்யூனிகேஷன் பெயிலியரைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை... ஏன் திரும்பத் திரும்ப அசம்பாவிதங்களைப் பற்றியே கேட்கிறீர்கள்...? ஏதேனும் பிரச்சினையா...?"

மாலிக் கேட்டதும் -

ஒரு விநாடி தயங்கியவர் ஓம்பிரகாஷிடம் திரும்பி ஆலோசனை கேட்டார்.

"இங்கே நடந்திருக்கும் அசம்பாவிதங்களைப் பற்றி அவர்களிடம் சொல்லலாமா இன்ஸ்பெக்டர்...?"

"சொல்லலாம்... தவறில்லை... விளக்கமாய் அவர்களிடம் நடந்ததைச் சொல்லிவிட்டால்தான் இனிமேற் கொண்டு அவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்கள்... எச்சரிக்கை உணர்வுடன் அவர்கள் பணியாற்றுவதே நல்லது..."

திரும்பவும் உரையாடினார் அகர்வால்

"மிஸ்டர் மாலிக்..."

"எஸ்... சொல்லுங்கள்..."

"இங்கே சில அசம்பாவிதங்கள் நடந்துள்ளன..."

"நீங்கள் கிளம்புவதற்கு முன்னால் ஒரு மிரட்டல் கடிதம் வந்தது நினைவு இருக்கிறதா...?"

"ஆமாம்..."

"அதை நாம் சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை... ஆனால் அவர்கள் பலம் பொருந்திய எதிரிகள் என்று



தெரிகிறது... கம்யூனிகேஷன் லிங்க் பெயிலியர் ஏற்பட்டதற்குக் காரணமே அவர்கள்தான் என்று தெரிகிறது... கிரா ரகேஷ் நம் கேம்பஸுக்குள்ளேயே அவர்களால் கொலை செய்யப்பட்டு உள்ளார்... மேலே சந்திரனிலும் தங்கள் கைவரிசையைக் காட்டப் போவதாகக் கூறியிருக்கிறார்கள்..."

"சந்திரனிலா...? இங்கோ காக்கை கிடையாது.. மனிதர்களோ இல்லாத நிர்ச்சலன கோள் இது... இங்கே எங்களை யார் என்ன செய்துவிட முடியும்...?"

"அப்படி நாம் அலட்சியப்படுத்த முடியாது மிஸ்டர் மாலிக்... எதற்கும் நீங்கள் ஐந்து பேரும் சற்று ஜாக்கிரதையாக பணியாற்றுங்கள்... அலட்சியமாக இருக்க வேண்டாம்... நடங்கல்கள் ஏற்பட்டு இந்நேரம் நீங்கள் பாதி வழியில் இருந்தால் உங்களைத் திரும்ப பூமிக்கு அழைத்துக் கொள்ளும் எண்ணத்தில் இருந்தோம்..."

"கவலைப்படாதீர்கள்... அதற்கான அவசியம் இல்லை... இன்னும் சில மணி நேரங்களில் தானியங்கி அணுமின் நிலையம் வெற்றிகரமாக இங்கே நிறுவப்படும்... ஒரு சின்ன பொத்தானை அழுத்தினால் போதும்... இங்கே மின் உற்பத்தி துவங்கிவிடும்..."

சொல்லிக் கொண்டே போன மாலிக்கின் குரல் சட்டென்று கம்மிப் போனது.

"நோ... நோ... ப்ளீஸ்... எங்களை விட்டு விடு..."

அவர் குரல் அலறியது.

அகர்வால் பதறினார்.

"மாலிக்... மாலிக்... என்ன ஆயிற்று...?"

கர்ர்ர்...

கர்ர்ர்...

கர்ர்ர்...

தொடர்பு சாதனத்தில் உயிரற்ற ஓசை.

சில நிமிஷங்களுக்குப் பிறகு - அந்த ஓசை நின்று போய் மீண்டும் இதே இண்டரப்ட் வாய்ஸ்.

**"ஹலோ... டைரக்டர்... சொன்ன மாதிரியே நாங்கள் உங்கள் விஞ்ஞானிகளை இப்போது சிறைபிடித்து விட்டோம்... உங்களின் விண்கலம் இப்போது எங்கள்**

கட்டுப்பாட்டில்..! விஞ்ஞானிகளின் உயிரை எடுக்கும் நிகழ்ச்சியைக் கொஞ்சம் ஒத்திப் போட்டிருக்கிறோம்... காரணம் அவர்கள் உயிர் பிழைக்க ஒரு வாய்ப்பு கிடைக்கட்டுமே என்றுதான்...''

அகர்வால் கெஞ்சினார்.

''ப்ளீஸ்... அவர்களை எதுவும் செய்ய வேண்டாம்... தேசத்திற்காக உயிரைப் பணயம் வைத்து சந்திரனுக்கு சென்றிருக்கிறார்கள்...''

''நாங்களும் தேசத்திற்காகத்தான் இத்தனை பாடுபடுகிறோம்... ஒரு சின்னத் திருத்தம்... தேசத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்காக பாடுபடுகிறோம்... எங்களின் உடன்படிக்கைக்கு நீங்கள் ஒத்து வந்தால் இவர்கள் உயிர் பிழைப்பார்கள்... அப்படி நீங்கள் ஒத்து வரவில்லை என்றால்... ஒரு மணி நேரத்திற்கு ஒருவராக உயிர்த் தியாகம் செய்ய ஆரம்பிப்பார்கள்...''

''நோ... வேண்டாம்... உங்கள் ஒப்பந்தம் என்ன...? அதை முதலில் சொல்லுங்கள்...''

''இந்த மின்திட்டத்தால் அரசாங்கம் கோடி கோடியாய் சம்பாதிக்கப் போகிறது... உலகம் பூராவும் இருந்து பண மழை கொட்டப் போகிறது... அந்தப் பணத்தை அரசியல்வாதிகள் போட்டி போட்டுக் கொண்டு ஸ்வாஹா பண்ணப் போகிறார்கள்... அதற்கு நாங்கள் விட மாட்டோம்... எங்களுக்கு கணிசமான ஒரு தொகை தர வேண்டும்... அதை நாங்கள் ஏழை மக்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த உத்தேசித்து உள்ளோம்...''

''எவ்வளவு தொகை...?''

''நூறு பில்லியன் டாலர்... அதைக் கொடுத்து விட்டால் விஞ்ஞானிகளை விட்டுவிடுவோம்... அனுமின் திட்டத்திற்கு எங்களால் எந்த இடைஞ்சலும் இருக்காது...''

''நீங்கள் கேட்கும் தொகை மிகவும் அதிகம்...''

''அப்படியானால் சரி... முதலில் அஜய் சர்மா... அப்புறம் மாலிக்... அதற்கப்புறம் வைத்யா... வசிஷ்ட்... சிநேகா... என்று ஒவ்வொருவர் உயிராக எடுத்து ஆடுபுலி ஆட்டம் விளையாடுகிறோம்...




''நோ... நோ... இதைப் பற்றி பிரதமர், ஜனாதிபதியிடம் பேச வேண்டும்... நான் தன்னிச்சையாக முடிவு செய்துவிட முடியாது... என்று சொல்ல வந்தேன்...''

''நீங்கள் யாரிடம் வேண்டுமானாலும் பேசிக் கொள்ளுங்கள்... இன்னும் ஒரு மணி நேரத்தில் எனக்கு முடிவு தெரிய வேண்டும்... முடிவு வரவில்லை என்றால் முதல் பலி ஆரம்பமாகும்...''

அகர்வால் மேலும் பேச முயல்வதற்குள் தொடர்பு துண்டாகிப் போனது.

## 10



நிசப்தத்தில் உறைந்த சந்திரனின் மேற்பரப்பில் விண்கலம் சாதுவாய் நின்றிருக்க - அதன் உள்ளே மெல்லிய பரபரப்பு அரும்பியிருந்தது.

வசிஷ்ட்டும் சிநேகாவும் மின் காந்தச் சுருள்களால் கட்டிப் போடப்பட்டு இருக்க -

அஜய் சர்மா -

வைத்யா -

மாலிக் -

மூவரும் அட்டகாசச் சிரிப்புகளோடு லேசர் பிஸ்டலும் கையுமாய் நின்றிருந்தார்கள்.

வைத்யா மாலிக்கைப் பாராட்டினார்.

''மாலிக்... உங்க நடிப்பு பிரமாதம்... யாரோ அட்டாக் பண்ணின மாதிரி அருமையா வாய்ஸ் குடுத்தீங்க...''

வசிஷ்ட் அவர்களை முறைத்தவாய்ப் பார்க்க - அவர்கள் சிரித்தார்கள்.

''அரசாங்கம் எங்கள் கோரிக்கைக்குப் பணிவதைத் தவிர வேறு வழியில்லை வசிஷ்ட்... சற்று நேரத்தில் நாங்கள் பில்லியன் கணக்கில் சொத்துக்கு அதிபதி ஆகப் போகிறோம்...''

வசிஷ்ட் கோபத்தோடு கத்தினான்.

''இது பச்சைத் துரோகம்...''

"ஊ... பெரிய துரோகம்... இதையெல்லாம் பார்த்தால் ஒரு சாதாரண விஞ்ஞானி பில்லியனேர் ஆகவே முடியாது... பூமியில் எங்கள் ஆட்களிடம் உத்தரவாதமாய் பணம் கை மாறியதும் உங்கள் இருவரையும் சுட்டுப் போகக்கவிட்டு எதிரிகள் உங்களைச் சுட்டுவிட்டார்கள் என்று நீலிக் கண்ணீர் வடித்த படி நாங்கள் மூன்று பேரும் தாய் பூமிக்குத் திரும்பி விடுவோம்..."

வைத்யா இடிச் சிரிப்புச் சிரித்தார்.

"வேடிக்கை பாருங்கள்... ஒரு பெரிய அரசாங்கம் தம் மூன்று பேரையும் காப்பாற்ற நமக்கே பணம் கொடுக்கிறது... இளைஞர் படை என்ற பெயரில் கவர்மெண்டை செமத்தியாக ஏமாற்றி விட்டோம்..."

அவர் அடித்த கமெண்டுக்கு மற்றவர்கள் மழை பெய்த மாதிரி சிரித்தார்கள்.

அதே விநாடி -

விண்கலத்துக்கு வெளியே ஏதோ ஓசை கேட்டது.

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்...

அவர்கள் சிரிப்பு சட்டென்று நின்றது.

அந்த ஓசையைக் கேட்டு வசிஷ்டும் சிநேகாவும் கூட திடுக்கிட்டு அசைய முற்பட்டார்கள்.

மின்காந்தச் சுருள் மெல்லிய வோல்ட்டேஜை அவர்கள் உடம்புக்குப் பாய்ச்ச...

விலுக்கென்று சுருண்டுகொண்டார்கள்.

அஜய் சர்மா காதுகளை உன்னிப்பாக்கினார்.

"என்ன சத்தம்..?"

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்...

"தெரியவில்லையே..?"

"நாம் ஐந்து பேரும் இங்கே இருக்கிற போது... இந்த காற்றில்லாத கிரகத்தில் வேறு என்ன நடமாட்டம்..?"

"எமர்ஜென்சி விண்டோவில் எட்டிப் பாருங்கள் அஜய்சர்மா... சீக்கிரம்..."

அஜய்சர்மா எமர்ஜென்சி விண்டோவை நெருங்கி அதன் கண்ணாடி சதுரத்தில் முகம் பதித்தார்.

அவர் முகம் தாரைப் பூசியதைப் போல திடுமென்று இருண்டது.

"அஜய்சர்மா... வெளியே என்ன சத்தம்...?"

சர்ர்ர்...

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்...

அஜய்சர்மாவின் தொண்டை அடைத்துக் கொண்டது. வார்த்தைகள் முழுசாய் வெளி வாராமல் குழறினார் -

"அ... அங்கே... அங்கே..."

"அங்கே என்ன...?"

"அ... அங்கே... அங்கே..."

அவரிடமிருந்து அதற்கு மேல் வார்த்தைகள் வராமல் போக -

வைத்யாவும் மாலிக்கும் அவரைத் தள்ளிக் கொண்டு எமர்ஜென்சி விண்டோவில் எட்டிப் பார்த்தார்கள்.

அவர்களும் முகம் கறுத்துப் போனார்கள்.

அடர்த்தியான பயம் மூவரின் நெஞ்சப்பிரதேசத்தையும் ஆக்கிரமிப்புச் செய்தது.

சர்ர்ர்ர்.

சர்ர்ர்ர்...

சர்ர்ர்ர்.

ஆறடி உயரத்தில் ஒரு விநோத உருவம் பச்சை நிறத்தில் கோழி முட்டை கண்களோடும், சப்பழிந்த மூக்கோடும் விண்கலத்தின் கதவை நெருங்கியிருந்தது.

அது கைகளை நீட்ட -

மின்சார ஸ்பார்க்குகள் மின்னல் பிரகாசத்தோடு தோன்றி - விண்கலத்தின் கதவு ஒரு காகிதம் கிழிவதைப் போல உருகிப் பிளக்க ஆரம்பித்தது.

உள்ளே நுழைய ஆரம்பித்த அந்த விநோத உருவத்தை நோக்கி - வைத்யா, அஜய்சர்மா, மாலிக் மூவரும் லேசர் பிஸ்டலை பிரயோகிக்க முயல -

அது நாலே எட்டில் அவர்களை நெருங்கி மின்சாரக் கைகளால் தொட்டது.

தொட்ட மறுகணம் ஏராளமான வோல்ட்டேஜ்களை வாங்கி விறுக்கென்று துவண்டு விழுந்தார்கள் அவர்கள்.

அந்த உருவத்தின் பார்வை இப்போது-

வசிஷ்ட், கிரேகாவின் மேல் திரும்பியது.

# 11



கண்ட்ரோல் ரூமில் அகர்வாலும், ஓம்பிரகாஷும் பரபரப்பாய் இருந்தார்கள்.

அகர்வால் தவிப்போடு சொன்னார்.

"ஒரு மணி நேரத்திற்குள்... அவர்கள் கேட்ட கோரிக்கை சம்பந்தமாய் முடிவு எடுப்பது என்பது நடக்காத காரியம்... அந்த மூடர்கள் அவசரப்பட்டு எதையும் செய்து விடக் கூடாதே என்று கவலையாக உள்ளது..."

"அவர்களோடு பேச முடியாமல் லிங்க் பெயிலியர் வேறு ஆகிவிட்டதே..."

ஓம்பிரகாஷ் வருத்தப்பட்ட போது-

ஒரு இன்ட்டரப்ட் வாய்ஸ் குறுக்கிட்டது.

"ஹலோ... விண்வெளி ஆராய்ச்சி மையமா...?"

"ஆமாம்..."

"என் பெயர் விஜய்... நான் இங்கே ஒரு ஆபத்தான சூழ்நிலையில் உள்ளேன்... உங்களுக்கு எதிரான சதியை அம்பலப்படுத்தவே இப்போது இன்ட்டரப்ட் செய்துள்ளேன்..."

திடுக்கிடலோடு காதுகளை உன்னிப்பாக்கினார்கள்.

"நீ இளைஞர் படையைச் சேர்ந்தவனா...?"

"இல்லை.. நான் ஒரு கம்யூனிகேஷன் என்ஜினியர்... டெலிகாம் டிபார்ட்மெண்ட்டில் விஜிலன்ஸ் பிரிவில் வேலை பார்க்கும் முனீஷ் என்பவன் வேலையில்லா பட்டதாரியான என்னை நயவஞ்சகமாக ஏமாற்றி ஒரு ரகசிய லெபாரட்டரியில் அரசாங்க ப்ராஜெக்ட் செய்வதாக என்னை நம்ப வைத்து அரசாங்கத்துக்கு எதிரான வேலைகளை வாங்கி உள்ளான்... அவன் பின்னால் ஒரு கும்பலே அமெரிக்க அரசாங்கத்துக்கு விசுவாசமாக வேலை பார்க்கிறது... அவர்களுக்கு நான் சில ஹைடெக் சாட்டிலைட் தொடர்புகளை செய்து தந்துள்ளேன்... இந்த விஷயங்கள் எல்லாம் சற்று முன்னர் அவர்கள் பேசிக் கொண்டதை எதேச்சையாகக் கேட்ட பிறகே எனக்குத் தெரிந்தது... நான் விஷயம் தெரிந்து கொண்டதை அவர்களும் பார்த்து விட்டார்கள்... அந்த பிரம்மாண்டமான ரகசிய லெபாரட்டரிக்குள் உயிருக்கு பயந்து நான் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறேன்... என்னிடம் உள்ள ஒரு மைக்ரோ வேவ் சாதனத்தின் உதவியோடு இப்போது உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்..."

"அமெரிக்க அரசாங்கம் எங்கே வந்தது...?"

"நம் மின்சார நிலா திட்டம் மிகவும் தாமதமாகத்தான் அமெரிக்காவுக்குத் தெரிந்தது... அதை வைத்து நம் அரசாங்கம் உலகின் பெரும் பணக்கார நாடாகி விடும் என்று பயப்பட்டது... அதன் விளைவாய் முதலில் நம் மின்சார நிலா திட்டத்தை தவிடு பொடியாக்க உத்தேசித்து காய்களை நகர்த்தி உள்ளது... இந்நேரம் அமெரிக்காவின் ரோபோட் ஒன்று நவீன உபகரணங்களோடு சந்திரனில் கால் வைத்திருக்கும்... வேற்று கிரக வாசி போல நெருங்கி நம் ஆட்களையும் மின்கலத்தையும் அழிக்க திட்டமிட்டு இருக்கிறார்கள்...?"

"மைகுட்னஸ்... அப்படியானால் இளைஞர் படை என்ற பெயரில் வந்த மிரட்டல்...?"

"அதுபற்றி எனக்குத் தெரியாது..."

"இப்போது நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் நவீன லெபாரட்டரி எங்கே இருக்கிறது...?"

"இடம் எனக்குத் தெரியாது... ஆனால் இப்பொழுது நான் டிரான்ஸ்மிட் செய்யும் வேவ் சிக்னல்களை டிரேஸ் மோடில் அனுப்பி வருகிறேன்... அதே டிரேஸ் பண்ணி நீங்கள் நான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியும்... ப்ளீஸ்... போலீஸ் போர்ஸுடன் வந்து என்னைக் காப்பாற்ற உதவுங்கள்..."

ஓம்ப்ரகாஷ் பரபரப்பாக எழுந்தார்.

அகர்வால் டெலிகாம் என்ஜினியர்களைக் கூப்பிட்டு அந்த வேவ் சிக்னல்களை ட்ரேஸ் செய்ய உத்தரவிட்டார்.

அவர் அடி மனசைக் கவலை ஆக்ரமித்தது.

மேலே விண்கலத்தில் இருப்பவர்களை அமெரிக்க சதியிலிருந்து காப்பாற்றுவது எப்படி...?

விஜய் அனுப்பி வைத்த வேவ் சிக்னல்களின் உதவியால் சிட்டி அவுட்டரில் இருந்த ஒரு பழைய மோல்டு பங்களாவுக்குக் கீழே பதுங்கியிருந்த அந்த லெபாரட்டரியைக் கண்டுபிடித்து போலீஸ் ஆட்களைச் சுற்றி வளைத்தார்கள்.

ஓம்ப்ரகாஷ் விஜய்யை மீட்டிருந்தார்.

இந்த நிமிஷம் விஜய் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் கண்ட்ரோல் அறையில் போராடிக் கொண்டிருந்தான்.

அரை மணி நேரப் போராட்டத்துக்குப் பின்-

ஸ்பேஸ் க்ராஃப்ட்டுடன் லிங்க் ஏற்படுத்திக் கொடுத்தான்.

லிங்க் கிடைத்த மறுவினாடி

அகர்வால் அங்கே என்ன ஆகியிருக்குமோ என்ற திகிலோடு வார்த்தைகளை வெளியிட்டார்.

"ஹலோ... ஹலோ... திஸ் ஈஸ் கண்ட்ரோல் ரூம்..."

"நான் வசிஷ்ட் பேசுகிறேன் ஸார்..."

மேலே இருந்து குரல் வர சின்ன நிம்மதிப் பெருமூச்சு அவரிடம் வெளியானது.

"வசிஷ்ட்... உங்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்பட்டு விடவில்லையே...?"

"விஞ்ஞானிகள் வைத்யா... மாலிக்... அஜய்சர்மா மூன்று பேரும் ஒரு விநோத உருவத்தால் தாக்கப்பட்டு கொலையாகி விட்டார்கள்... மின்காந்தச் சிறைக்குள் நாங்கள் கட்டிப் போடப்பட்டு இருந்ததால் எங்களை அந்த விநோத உருவம் அணுக முடியவில்லை... அதனால் நாங்கள் தப்பித்தோம்..."

"விஞ்ஞானிகள் மூவரும் இறந்து விட்டார்களா...?"

அதிர்ச்சியோடு அகர்வால் கேட்க - வசிஷ்ட் நிதானக் குரலில் சொன்னான்.




"அவர்கள் மூவரும் சாக வேண்டியவர்கள்தான் ஸார்... இளைஞர் படை என்று ஒரு பொய்யான அமைப்பு இருப்பதைப் போல் ஏமாற்றி அந்தப் போர்வையில் அரசாங்கத்தையும் உங்களையும் மிரட்டிக் கொண்டிருந்தது அவர்கள்தான்... விண்கலத்தில் பயணப்படும் சிறிது நேரத்திற்கு முன்பாக திகில் ஏற்படுத்துவதற்காக சிறீ ராகேஷையும் கணபதியையும் கொன்றதும் அவர்கள்தான்... செயற்கையாய் லிங்க் பெயிலியர் ஏற்படுத்தி டாப்பணில் பழுது ஏற்பட்டிருப்பதாகப் பொய் சொல்லி யாரோ சதி செய்வதைப் போல தோற்றம் ஏற்படுத்தி உங்களிடம் பணம் பறிக்க முயற்சித்தார்கள்... அவர்களின் பேராசைக்கு ஆண்டவனே தண்டனை தந்ததைப் போல அந்த உருவத்தின் மின்சாரக் கைகளுக்கு பலியாகி விட்டார்கள்... நாங்கள் முரண்டு பிடிக்காமல் இருக்க மின்காந்தச் சுருள்களால் எங்களைக் கட்டியிருந்தார்கள்... அந்த மின்காந்த அலைகளை உடைக்க அந்த உருவத்தால் முடியவில்லை... அந்த முயற்சியில் அது உயிரை விட்டு விட்டது - அந்த முயற்சியில் மின்காந்தச் சுருள் வெடித்து விட்டது... நாங்கள் அந்தத் தளையிலிருந்து விடுபட்டு இந்த நிமிஷம் அனு மின் நிலைய இன்ஸ்டலேஷன் பணிகளை முடித்து விட்டோம்... ஒரு பொத்தானைத் தட்டி டெஸ்ட் ரன் ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி..."

"வெரி குட் வசிஷ்ட்... சிநேகா...! உதவியாளர்களாகப் போன உங்களின் நேர்மையையும் தீரத்தையும் பாராட்டுகிறேன்... அந்த விஞ்ஞானிகளை அழித்த விநோத உருவம் வேறொன்றுமில்லை... நம் திட்டத்தை நாசமாக்குவதற்காக அமெரிக்காவினால் அனுப்பப்பட்ட ரோபாட் அது... இரண்டு நாச சக்திகளும் ஒன்றோடு ஒன்று மோதி அழிந்து விட்டன..."

கண்ட்ரோல் ரூமில் முதல் தடவையாய் ரொம்ப நேரத்துக்குப் பிறகு - சந்தோஷ அலைகள் பரவியது.

## 13



அனு ரங்கநாதனிடமும், மகேஸ்வரியிடமும் விஜய்யை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"நான் சொன்னேனே விஜய்... இவர்தாம்ப்பா..."

ரங்கநாதன் மூக்குக் கண்ணாடியை நாசிக்கு மேலே ஏற்றிக் கொண்டு அவளைப் பார்த்தார்.

மகேஸ்வரி கேட்டாள்.

"தம்பி என்ன வேலை பார்க்கறார்...?"

"விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் டெலி கம்யூனிகேஷன் எஞ்ஜினியரா இருக்கார்..."

அவள் சொல்லி முடிக்கும் முன்பே ரங்கநாதன் தலையை ஆட்டினார்.

"தெரியுமே... இந்த விஜய்யைப் பத்தி போன வாரம் விண்டுவில் போட்டோவோட ஆர்ட்டிக்கிள் வந்ததே. எனக்கு மாப்பிள்ளைன்னு ஒருத்தர் வந்தா இந்த யூத் மாதிரிதான் இருக்கணும்ன்னு அந்த ஆர்ட்டிக்கிள் படிக்கறப்போவே நான் நினைச்சேன்..."

ரங்கநாதன் சொல்ல - அத்தனை நேரமாய் திக் திக் இருதயத்தோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்த அனுவுக்குள் பட்டாம்பூச்சிகள் பறக்க ஆரம்பித்தன.

ஒரு வெட்கப் புன்னகையோடு விஜய்யைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பார்வையும் அனுவின் கண்களைச் சந்தித்து ஒரு சந்தோஷ ஹாரே. சொன்னது.






ஓர் மழைகால அந்தியில்
உனக்கும் எனக்கும்
காதல் முளைத்தும்
துளிர்க்காமல்
போனது
எப்படியடி...?

- கவிசிற்பன்

**இழந்த வாலிப சக்தி - உணர்ச்சி**
**சுகவாழ்வு மீண்டும் பெற அணுகவும்**

வாலிப வயதில் தவறான வழிகளில் சக்தியை இழந்தவர்கள், வீரியம் குறைந்தவர்கள், சீக்கிரம் சக்தி நழுவுதல், தூக்கத்திலும், சிறுநீரிலும் இந்திரியம் வீணாகுதல், நரம்பு தளர்ச்சியினால் தாம்பத்திய வாழ்வில் குறைபாடு, உறுப்பு வளர்ச்சி இன்மை, குழந்தை இல்லா குறை மற்றும் சகலவித ரகசிய வியாதி, பலஹீனங்கள் நீங்க, வாழ்க்கையில் பரிபூரண இன்ப சுகம் பெற ஆண்மைக் குறைவு நரம்பு தளர்ச்சி நிபுணர்கள் -

**கியூரா கிளினிக்**

(Sex Specialist) Govt. Regd. DR. P. SAGAR
அவர்களை சந்தித்து குடும்ப வாழ்க்கையில் இன்பமாக இருங்கள். 115, முதல் மாடி, திருவல்லிக்கேணி ரத்னா கேப் ஸ்டாப், சென்னை - 600 005. ☎ 8586479 Fax : 8572085
பார்வை நேரம் : 9 a.m. to 9 p.m. ஞாயிறு 9 a.m. to 6 p.m.

எங்கள் கிளை : சக்தி டிஸ்பென்சரி,
190, கிழக்கு கடற்கரை சாலை, வெட்டுவாங்கேணி
பஸ் நிலையம் அருகில், சென்னை - 600 041.